# சாளரம்

# 2007






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Best Wishes To :-

**Princess Tamil Vidyalayam**

**P.Rajathurai**

Attorney at Law, Acting Magistrate,
Nuwara-Eliya



No-64, Mountmary Road,
Nuwara-Eliya
Tel:- 052-2234720,052-2234407,072-2426872

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரின்சஸ் தமிழ் வித்தியாலயம்

சாரம் நூல் வெளியீடு

நாங்கள் செதுக்குவது சிலைகளல்ல
நீங்கள் சுமப்பது சுமைகளல்ல
நாளைய வெற்றிக்கான
இன்றைய அனுபவங்களே

உள்ளங்கள் அழுதாலும்
உதடுகள் சிரிப்பது
உங்களின் நாளைகளுக்காக
எங்கள் சத்தங்கள்
உங்களை சுத்தமாக்கும்......

இது விதை
விருட்சமாகும் நாளை

# 23.09.2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே...........


மகுடவாசகம். குறிக்கோள்

பாடசாலை கீதம்

தமிழ்தாய் வாழ்த்து . தமிழ் மொழி வாழ்த்து

**ஆசிச் செய்திகள்**

மத்திய மாகாண தமிழ் கல்வி அமைச்சர்

சட்டத்தரணி **P**.இராஜதுரை

வலயக் கல்விப் பணிப்பாளர்

முன்னாள் வலய கல்விப் பணிப்பாளர்

வலய தமிழ் கல்விப் பணிப்பாளர்

முன்னாள் ஆங்கில கல்விப் பணிப்பாளர்

பாடசாலை முதல்வர்

**Dr**.அருள்சந்தனம் அவர்கள்

**S.D.S.** செயலாளர். **P.P.P.** செயலாளர்

அன்புள்ள ஆசிரியரே-ஆபிரகாம் லிங்கன்

பாடசாலை வரலாறு

பாடசாலையின் அமைவிடப்படம்

பாடசாலையில் கடமையாற்றிய அதிபர். ஆசிரியர்கள். தொண்டர் ஆசிரியர்கள்

தற்போது கடமையாற்றும் ஆசிரியர்கள். பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள்.

மாணவர்தலைவர்கள். வகுப்புத் தலைவர்கள்.இலக்கிய மன்ற உறுப்பினர்கள் (தமிழ்.ஆங்கிலம்)

இந்துமாமன்ற நிர்வாகக் குழுக்கள். தமிழ் மொழித்தினப் போட்டியில் வெற்றியீட்டியோர்.

மாணவர்கள் அமைவிடம். மாணவர் விபரம். ஆசிரியர் விபரம்

மாணவர் அனுமதி. பாடசாலை வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்த மக்கள் பிரதிநிதிகளும்.

-நலன்விரும்பிகளும்

2002 முதல் பாடசாலையில் அமுலாக்கிய வேலைத்திட்டங்கள்.

அறிஞர் வாக்குகள் சில. இளைஞர்களே -திருமதி.**S**.கணேசன் பிரதியதிபர்

ஐந்தாம் தர மாணவர்களும் புலமைப்பரிசில் பரீட்சையும். - திரு.**A**.ராஜேந்திரன் ஆசிரியர்

பெண்களும் கல்வித்துறையும் - ஆசிரியை ந.புனிதவதி. மனிதனின் ஒற்றுமை-திரு.**S**.பிரங்ளின்.

மனிதா-திரு.வி.கோபிநாத்

சிறுவர் துஷ்பிரயோகம் - திரு.**G**.விக்டர் ஆசிரியர்

அஸ்தமனத்தின் ஓர் உதயம் -திருமதி.ராஜேந்திரன் சசிகலா ஆசிரியை

சிறுவர்களின் உயரிய நலன்கள் -திரு.மை.பன்னீர்செல்வம் பிரதியதிபர் இராகலை த.ம.வி

புள்ளிவழங்கல் முறைகள் மாணவர்களை ஊக்கப்படுத்துகின்றனவா? -திரு.**A**.சதீஸ்குமார் ஆசிரியர்

குழந்தைப் பருவம். மனிதா - **V**.கோபிநாத் ஆசிரியர்

சிறுவர் கல்வியில் குடும்ப. சமூகங்களின் பங்களிப்பு -திரு.கந்தசாமி கேதீஸ்வரன் ஆசிரியர்

விண்வெளி விந்தைகள் - செல்வி.**M**.துசிதாதேவி ஆசிரியை

மாணவர் ஆக்கங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகுடவாசகம் (Vision)

எதிர்கால சவால்களை எதிர்கொள்ளக் கூடிய

அறிவும் தேர்ச்சியும் கொண்ட பண்புசார் சமூகம்

ஒன்றை பாடசாலையினூடாக உருவாக்குவோம்.

## குறிக்கோள் (Mission)

இலங்கையின் பன்மைச் சமூகத்தின் கௌரவத்தையும் மனித உரிமைகளையும் கண்ணியப்படுத்தும் வகையில் மாற்றமுறும் உலகின் சவால்களை எதிர் கொள்ளக் கூடிய ஜனநாயக நீதிமுறையான வாழ்க்கை முறையைக் கொண்ட தேசிய பாரம்பரிய கலாசார தனித்துவங்களை பேணிக்காக்கக் கூடிய தனிநபர் மாற்றங்களுக்கு ஏற்ப இணங்கி வாழவும் இலங்கையின் அபிவிருத்திக்கு பங்களித்து தேசத்தை கட்டியெழுப்பக் கூடிய அறிவும் தேர்ச்சியும் கொண்ட பண்புசார் சமூகமொன்றை பாடசாலையினூடாக உருவாக்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை கீதம்

சீதம் மிகு பிரின்சன்ஸ் தமிழ் வித்தியாலய தாயே
சீர் பெற்றிட அருள் செய்திடுவாயே
இதம் பெற்று இகம் தனில் ஓங்க - நாமே நாம்
சிரம் தாழ்த்தி பணிகின்றோம் தாயே.

என்னும் எழுத்தும் அளந்தே - நாம்
விண்ணும் புவியும் அளப்போமே!
கண்ணும் கருத்தாய் பயின்றே நாம்
அறிவின் விழியை திறப்போமே
ஆயகலைகள் தெரிந்தே நாம்
ஐயம் பெற்று திகழ்வோமே
கல்வித் தாயின் மணிக்கொடி மதித்து
வையம் தலைமை கொள்வோமே
இதம் பெற்று இகம் தனில் ஓங்க - நாமே நாம்
சிரம் தாழ்த்தி பணிகின்றோம் தாயே.

கல்வி என்ற உளி எடுத்தே - ஆசான்
அறிவு என்ற விழி திறப்பார்
தாய்க்கு நிகராய் எமை அமைத்து
தரணியில் உயர்ந்திட செய்திடுவார்.
பெரும் புகழ் உமக்கே இசைத்து
சிரம் தாழ்த்தி பணிகின்றோம் தாயே
சீர் பெற்றிட அருள் செய்திடுவாய் தாயே
பிரின்சன்ஸ் தமிழ் வித்தியாலய தாயே

சீதம் மிகு -------

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் தாய் வாழ்த்து

கா தொளிரும் குண்டலத்தாள்
கனி மொழியாய் வாழ்க
கைக்கு வளையாபதி கொள்
கன்னிகையாள் வாழ்க

மேதகு மென்மார் பிடை
சிந்தா மணியாள் வாழ்க
மென்னும் மணிமேகலை
சூழ் மெல்லிடையாள் வாழ்க

கீதமலர் பாத மொழி
சிலம்புடையாள் வாழ்க
சேர சோழர் பாண்டியர் தம்
செல்வ மகள் வாழ்க

நீதியுறு செங்கோளாய்.....
தூயகுள் தாங்கும்
நிகரரியாய் செந்தமிழ் தாய்
நீடுழி வாழ்க.

# தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே !
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே !

ஏழ்கடல் வைப்பினும் தன்மணம் வீசி
இசை கொண்டு வாழியவே !
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே !

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே!

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே !
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே !

- பாரதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மத்திய மாகாண தமிழ் கல்வி அமைச்சரின் ஆசிச் செய்தி

மலையகத்தை பொறுத்தவரை எதிர்காலத்திலே ஆளுமை விருத்தி கொண்ட ஒரு இளம் தலைமுறையை உருவாக்கும் பாரிய பொறுப்பு பாடசாலைகளுக்கு உண்டென்பது மறுக்கமுடியாத உண்மை. ஒவ்வொரு மாணவனின் கல்வி உணர்வுகளையும் வளர்த்து சமுதாயத்தை நேசிக்கும் பண்புள்ள நட்பிரஜை -யாக உருவாக்குவதிலே பாடசாலைகளின் பங்கு அளப்பரியதாகும்.

அவ்வகையிலே மலைநாட்டிலே கோணப்பிட்டிய பிரதேச மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் முக்கிய பங்காற்றி வரும் பிரின்சஸ் தமிழ் வித்தியாலயம் தனது கல்வி வளர்ச்சியின் முன்னேற்றத்தை நினைவு கூறும் முகமாக, 1930 களில் ஆரம்பிக்கப்பட்டதற்கான வாய்மொழிமூலமான ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு வரலாற்று நூல் வெளியிடுவதையிட்டும் அதற்கு ஆசிச்செய்தி வழங்குவதையிட்டும் நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இப் பாடசாலை 1930ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட போதும் 2002ம் ஆண்டு வரை எந்தவிதமான அடிப்படை வசதிகளுமின்றி காணப்பட்டு தற்போது 1-9 ஆம் தரம் வரை தரமுயர்த்தப்பட்டு கல்வி, கலை, விளையாட்டு போன்றவற்றில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்படுகின்றமை மகிழ்ச்சிக் குறியதொன்றாகும். வரலாற்று பெருமை மிக்க இலங்கைத் திருநாட்டில் ஒவ்வொரு பாடசாலைகளும் இவ்வாறு வரலாற்றுப் புத்தகங்கள் வெளியிடுவது பெருமைக்குரிய விடயமே. இப்பாடசாலை வரலாற்று நூல் வெளியிடும் இம்முயற்சி வெற்றியளித்து மலையக மாணவர்களின் கல்வியில் முன்னேற்றம் ஏற்பட்டு ஒரு புத்திஜீவியான சமுதாயத்தை கட்டியெழுப்ப எனது மனமார்ந்த பாராட்டுக்கள் உரித்தாகட்டும்.

இன்றைய மனிதன் தன் பகுத்தறிவால் உலகத்தை கடந்து பலவற்றை அறிந்தும், அளந்தும் சாதனைகளைப் படைக்கவும், இன்றைய சீரற்ற சூழ்நிலையில் நாளைய சமூகம் சீறிய பண்புகளையும், நல்லொழுக்கத்தையும் கொண்டவர்களாக மிளிர இப்படியான நூல் வெளியீடுகள் அவசியம். இப் பாடசாலை முன்னேற்ற பாதையை நோக்கி வீறுநடை போட்டு இனிவரும் காலங்களிலும் கல்வி வளர்ச்சியில் மென்மேலும் வளர்ச்சியடைந்து செல்வ தற்கு பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள்,பழைய மாணவர் -கள் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர் அனைவருக்கும் என்றும் எனது வாழ்த்துக்கள்.

எஸ்.அருள்சாமி
(மத்திய மாகாண தமிழ் கல்வி அமைச்சர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி



நுவரெலியா மாவட்டம் ஹங்குராங்கெத்த கல்வி வலய கோணப்பிட்டிய பிரின்சஸ் தமிழ் வித்தியால யத்தின் புதிய இரண்டு மாடி கட்டிட அங்குரார்ப்பண விழாவையொட்டி பிரசுரமாகும் "சாளரம்" மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதையிட்டு பேருவகை அடைகின்றேன்.

மேற்படி பாடசாலை தற்போது 9 ஆசிரியர்களையும் 215 மாணவர்களையும் கொண்டு தற்போதைய அதிபரின் கடின முயற்சியினா -லும் ஊக்கத்தாலும் வளர்ச்சி கண்டு வருகின்றமை மகிழ்ச்சியும் மன நிறைவையும் அளிக்கின்றது. ஒருசமூகம் உலகில் தன் அடையாளத்தை பதிவு செய்யவும், வளர்ச்சியடையவும் உதவும் கருவி கல்வியாகும். கல்வி வளர்ச்சியின்றி எந்த சமுதாயமும் உலகில் உண்மையாக நின்று நிலைத்து மேம்பட்டதாக வரலாறு இல்லை. எனவே பௌதீக வளங்களாலும் உள்ளார்ந்த வளர்ச்சியாலும் பாடசாலைகள் வளர வேண்டும்.அதனூடே அடிமை நிலையில் உறங்கி கிடக்கும் சமுதாயம் வீறுகொண்டு மேலெழ வேண்டும். அவ்வாறான ஒரு சமூக பணிக்கு இப் பாடசாலையும் ஒரு ஊடகமாக அமையும் என்ற நம்பிக்கையோடு எனது வாழ்த்துக்களையும் ஆசியையும் வழங்குகின்றேன்.

நன்றி

சட்டத்தரணி பெ.ராஜதுரை
பதில் மாவட்ட நீதிபதி
நுவரெலியா.

ஒவ்வொரு மனிதனுக்கும் வாழ்க்கை உண்டு வரலாறு உண்டோ? உண்டு. எப்போதெனில் "தான் வாழ்ந்த காலத்தில் சமூகத்தை. மொழியை கலையை. கலாசாரத்தைத் தன்தோளிலேற்றி ஓரங்குலமாவது உயர்த்தியிருந்தால் அல்லது உயர்த்த எத்தனித்திருந்தால்"

சுகுகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

හපුවල විපීත හිමි,
කලාප අධ්‍යාපන අධ්‍යක්ෂ,
කලාප අධ්‍යාපන කාර්යාලය,
හඟුරන්කෙත.

## මප/හඟු/ගෝනපිටිය අංක 01 දෙමළ විදුහල.

හඟුරන්කෙත අධ්‍යාපන කලාපයේ වැවිලි ආශ්‍රිතව පවතින ද්‍රවිඩ මාධ්‍ය පාසැලක්වන මප/හඟු/ගෝනපිටිය අංක01 දෙමළ විදුහලේ අද දින පැවැත්වෙන උත්සවයට සහභාගි වීමට ලැබීම භාග්‍යයක් කොට සලකමි.

අපේ පාසැල නුවරඑළිය දිස්ත්‍රික්කයේ සිංහල, ද්‍රවිඩ ප්‍රජාවගේ එකමුතුකමේ සංකේතයකි.

උතුරු නැගෙනහිර ජන අරගලයක යෙදෙන අයට මේ දිස්ත්‍රික්කයේ ජනතාවගේ සමඟිය ආදර්ශයක් වියයුතුය. සාමය,සමඟිය අගයන පරිසරයක පිහිටි මෙම විදුහලේ වත්මන් දියණුවට අතහිත දුන් සැමට තුති පුදමි.

වැවිලි ආශ්‍රිත දෙමාපියන් තම දරුවන්ට අනිවාර්යයෙන්ම අධ්‍යාපනය ලබා දීමට මීටවඩා උනන්දුවක් දැක්වීම අත්‍යවශ්‍යය. මධ්‍යම පළාත් සභාවෙන් ප්‍රමාණවත් ද්‍රවිඩ මාධ්‍ය ගුරුභවතුන් පත්කර ඇති බැවින් එම සම්පතින් උපරිම ප්‍රයෝජනය ගන්නා මෙන් වැවිලි ප්‍රජාවගෙන් ඉල්ලා සිටිමි.

හපුවල විපීත හිමි.
කලාප අධ්‍යාපන අධ්‍යක්ෂ,

"If proper attitudes are developed in our youth,
we will Certainly have a better future for our country"

Dr.S.R.Krishnan



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ගෝනපිටිය දෙමළ විද්‍යාලය

## හිටපු කලාප අධ්‍යාපන අධ්‍යක්ෂතුමාගෙන්,

ගෝනපිටිය අංක 01දෙමළ විද්‍යාලයේ නව දෙමහල් ගොඩනැගිල්ලේ පලමු අදියර විවෘත කරන මේ මොහොතේ එම විදුහල පිළිබඳව සටහනක් තැබීමට ඉඩ ලැබීම පිළිබඳව සතුටු වෙමි.

හඟුරන්කෙත අධ්‍යාපන කලාපයේ දෙමළ මාධ්‍ය පාසැල් 11 ස්ථානගතවී ඇත්තේ පොකුරු (cinstors) දෙකක් වශයෙනි.ඉන් එකක් හේවාහැට නගරය මුල්කොටගෙනද අනෙක වලමලේ ගෝනකැලේ මුල්කොට ගෙනද ස්ථානගතවී තිබේ. මෙයින් වලමලේ මුල්කොටගත් පොකුරේ කැපී පෙනෙන දෙමළ මාධ්‍ය පාසල ගෝනපිටිය අංක 01 දෙමළ විද්‍යාලයයි.

ගෝනපිටිය වතුයායට අයත් දෙමළ වතු පාසලක්ව තිබී වර්ෂ 1930දී රජයට පවරාගත් මෙම පාසලේ අද ශිෂ්‍ය සංඛ්‍යාව 215.වන අතර ගුරු මණ්ඩලය 08කි. මෙම කොටසේ වැඩිම ශිෂ්‍ය සංඛ්‍යාවක් සිටින දෙමළ මාධ්‍ය පාසල වන්නේද මෙයයි. 1996 දී විදුහල වත්මන් ස්ථානයට ගෙනඑන ලද අතර,වත්මන් විදුහල්පති රාසලිංගම් මහතාගේ දැඩි උනන්දුව හා කැපවීම මත සහ වත්මන් පලාත් සභා ද්‍රවිඩ අධ්‍යාපන අමාත්‍ය එස්.අරුල්සාමි මැතිතුමාගේ කාරුණික අනුග්‍රහය මත පාසලට නව දෙමහල් ගොඩනැගිල්ලක් ලැබී තිබීම සතුටට කරුණකි. එසේම එහි මුල් අදියරේ කටයුතු ඉතා ඉක්මණින් නිමකොට විවෘත කිරීමට කටයුතු යෙදීම පිළිබඳව එයට දායකවූ සියළු දෙනාට ස්තුතිය පිරිනමමි.

අධ්‍යාපනය අතින් පහල මට්ටමක සිටින හඟුරන්කෙත අධ්‍යාපන කලාපයේ අසරණ දෙමළ දරුවන්ට මෙම පාසල අගනා තිලිණයකි.එසේම මෙම පාසලට වඩාත් අවශ්‍ය සම්පත් සැපයීමෙන් 11 ශ්‍රේණිය දක්වා පන්ති උසස් කිරීමෙන් සහ අවශ්‍ය ගුරු මණ්ඩලය සලසා දීමෙන් ඔවුන්ගේ අධ්‍යාපනය හා ඒ තුලින් ජීවන මට්ටම් ඉහල නැංවීමට මහත් පිටුවහලක් වනු ඇත. ඒ පිළිබඳව වගකිවයුත්තන් සියළු දෙනාගේ අවධානය යොමුවනු ඇතැයි සිතන අතර විදුහල්පති රාසලිංගම් මහතාට, ඔහුගේ ගුරුමණ්ඩලයට, සිසුන්ට හා දෙමාපියන්ට මාගේ සුභපැතුම් පිරිනමමි.

රංජිත් නිලවතුර
හඟුරන්කෙත අධ්‍යාපන කලාපයේ හිටපු
කලාප අධ්‍යාපන අධ්‍යක්ෂ.

**No Impossible at my Diary**

- Nepolian



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச் செய்தி

ஹங்குராங்கெத்த கல்வி வலயத்தில் தனித்துவமான வரலாற்றினைக் கொண்ட பாடசாலை கோணப்பிட்டிய பிரின்சஸ் தமிழ் வித்தியாலயமாகும். இப்பாடசாலை இப்பிரதேச மக்களின் கலாசார விழுமியங்களை வெளிக் காட்டும் ஒரு பாடசாலையாக காணப்படுகின்றது.

1930ம் ஆண்டு ஆங்கிலேயர் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை கல்வித் துறையில் துரித வளர்ச்சி கண்டு வருகின்றது. குறிப்பாக கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளிலும் பௌதீக மனித வளத்திலும் அபிவிருத்தி காணக்கூடியதாக உள்ளது. இதற்காக அயராது தனது முழுநேரத்தையும் அர்பணிக்கும் அதிபர் திரு.K.இராசலிங்கத்திற்கும் அவரோடு "**தம்பியுள்ளவன் படைக்கஞ்சான்**" என்ற முதுமொழிக் கிணங்க தோளோடு தோள் நின்று பாடசாலையின் வளர்ச்சிக்கு உறுதுணையாகவிருக்கும் ஆசிரிய ஆசிரியைகளை பாராட்டுவதோடு அவர்கள் நீண்ட ஆயுளுடன் வாழ இறைவனை பிரார்த்திக்கின்றேன். அதே நேரத்தில் பாடசாலை வளர்ச்சியிலும் பிரதேச வளர்ச்சியிலும் தனது முழுபங்களிப்பையும் ஒத்துழைப்பையும் நல்கி ஏறத்தாழ ஒரு கோடி ரூபா நிதியுதவியினை இப்பகுதி பாடசாலைகளுக்கு வழங்கி இப்பகுதி மாணவர்பால் மக்கட்பால் அன்பும் ஆதரவும் கொண்ட மத்திய மாகாண தமிழ் கல்வி அமைச்சர் பெருமதிப்பிற்குரிய கௌரவ S.அருள்சாமி அவர்களுக்கு வலயத்தின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

எம்.சோமசுந்தரம்
கோட்டக் கல்விப் பணிப்பாளர்
வலயக் கல்விக் காரியாலயம்
ஹங்குராங்கெத்த

ஏனையவர்களின் துக்கத்தை பங்கிட்டு ஏனையோரின் மகிழ்ச்சியின் போது மகிழ்ச்சியடைந்து, ஏனையோரின் பாக்கியத்தை வெற்றியை,தன்னுடையது போன்று கருதி மகிழவும், ஏனையோரின் அபாக்கியத்தை தோல்வியை, நட்டத்தை தனக்கு நேர்ந்ததாக கருதி கவலைப்படல், போன்ற மனிதநேயத்தை பிள்ளைகளிடம் உருவாக்குவோம்.

ஆ.சிங்வெங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஒரு குறுகிய கால பாரிய வளர்ச்சியில் பிரின்சஸ் ..........

அதிபரின் நடி பங்கினை ஆளுமை மிக்கதாக அர்த்தமுள்ளதாக்கி செயல்படும் அதிபர் திரு.கே.இராசலிங்கம் இளம்வயது இளமை வேகத்துடனும், விவேகத்துடனும் ஏற்றுக் கொண்ட பணியினை இனிதே நிறைவேற்றிட தினமும் தவறாது இருபது மைல்கள் தொலைவுக்கப்பால் சென்று இரவோடு இரவாக இல்லம் வரும் உள்ளம் எல்லோருக்கும் வாய்த்து விடுவதில்லை. கல்வித் திணைக்களம் அமைச்சு அதிகாரிகளிடம் அடிக்கடி சென்று அடம்பிடித்து அத்தியாவசிய தேவைகளைப் பெற்று கொள்வதாலேயே மிக. மிக பின்தங்கிய பகுதியில் அமைந்துள்ள கோணப்பிட்டிய பிரின்சஸ் பாடசாலை இன்று பிரசித்தி பெற்று வருகின்றது.

கணினி யந்திரங்கள்,ரோனியோ யந்திரம் போன்ற பெறுமதி மிக்க பொருட்கள் அரசிடமிருந்து பெறாமல் தனியாரை நாடி தேடி வைத்திருக்கிறார். புதியதொரு மாடிக்கட்டிடத்தை பெற்று விட்ட பெரும் மகிழ்ச்சியுடன் கிரகப் பிரவேஷம் செய்யும் காரியத்திலும் ஈடுபட்டுள்ளார்.

க.பொ.த. உயர்தரம் வரை பாடசாலையினை தரமுயர்த்தி விட வேண்டுமென்ற இலட்சிய வேட்கையுடன் பணியாற்றி வரும் இவருக்கு ஆசிரியர்கள், பெற்றோர்கள் பழைய மாணவர்கள், அதிகாரிகள் பக்க பலமாக இருப்பது போற்றுவதற்குரியது. ஒரு குறுகிய காலத்தில் பாரிய வளர்ச்சி கண்டு வரும் இப்பாடசாலை சகல துறைகளிலும் சிறப்பு பெற என் இதயங்கனிந்த நல்வாழ்த்துக்கள்.

**டி.ஆர். செல்வராஜா**
முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர்.
வலப்பனை
ஹங்குராங்கெத்த கல்வி வலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முதல்வரின் ஆசிச்செய்தி

ஓங்கி உயர்ந்த மலைகள். உயர்ந்து தாழ்ந்த மரங்கள். மலைகள் மீது தவழ்ந்து செல்லும் மேகங்கள். மரங்களைத் தொட்டு தடவி சுகம் விசாரித்துச் செல்லும் தென்றல். ஆகா! என்ன அழகு இந்த இயற்கை எழிலோடு அமையப் பெற்ற பாடசாலை பிரின்சஸ் தமிழ் வித்தியாலயமாகும். புதிய உலகிற்கான புது மனிதன் இன்று குழந்தையாகப் பிறந்துள்ளான். அவனை நாளைய உலகிற்கு மனிதப்பண்புள்ளவனாக மாற்றி அமைக்கும் பொறுப்பு எம்மைச் சார்ந்ததாகும். அதற்கேற்ற வகையில் கல்லூரியின் கடந்த கால,நிகழ்கால,எதிர்கால நிகழ்வுகளையும் ஆசிரியர்கள், மாணவர்களின் ஆக்கங்களையும் கொண்டு **"சாளரம்"** என்ற இந்நூல் வெளியிடும் இக்கன்னி முயற்சிக்காக அளவிலா ஆனந்தமடைகின்றேன்.

1930 களில் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை இன்று குறிப்பிடத்தக்க வளர்ச்சிப்பாதையில் செல்வதற்கு காரணகர்த்தாக்களாக இருந்த, இருக்கின்ற அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள்,பழையமாணவர்கள், நலன்விரும்பிகள், மாணவர்கள் அனைவருக்கும் எனது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஒரு மனிதன் பிறந்த குறிப்பேட்டுப் பதிவுகள் அவனது வாழ்விற்கு எவ்வளவு முக்கியமோ அதேபோல் ஒரு பாடசாலையின் பிறப்பு, வரலாற்றுப் பதிவேடும் பாடசாலை சமூகத்திற்கும் முக்கியமான ஆவணமாகும். இக்காரணத்தின் வெளியீடே சாளரத்தின் பிறப்பு.

"சாளரம் என்பது யன்னல் என்ற கருத்தைக் கொண்டு விளங்குகின்றது. இந்த யன்னலிலிருந்தே உலகத்தை பார்க்கின்றோம். உலக மாற்றத்தை, முன்னேற்றத்தை, போக்கையும், அதற்கேற்றவகையில் எமது கல்வி,வாழ்க்கை தொழில், அனுபவங்களைப் பெற்று வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டிய தேவை உள்ளது. எதிர்கால உலகிற்கு மாணவர்களை இந்த சிறிய யன்னல் ஒளியினூடாகவே தயார்படுத்தப்பட வேண்டிய தேவை இருக்கின்றது. அதே போல் இந்த யன்னல் ஒளியினூடாக தன்இல்லத்தையும், தன்னையும்,மற்றவர்களையும்,பிரகாசிக்கச் செய்ய வேண்டும்.என்ற கருத்தையும் விளக்கி நிற்கின்றது.

இந்த நூலுக்கு ஆசிச்செய்திகள், ஆக்கங்கள், தந்துதவிய அனைத்து பெருமைக்குறிய உள்ளங்களுக்கும் அச்சிட்டு உதவிய இராகலை மெகா கிரபிக் நிறுவனத்தாருக்கும் உள்ளார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும். சாளரம் எதிர்காலத்திலும் மென்மேலும் பல புதிய அம்சங்களை கொண்டு வெளிவர வேண்டுமென வளமான வாழ்த்துக்களை உளமாற தெரிவித்துக்கொள்கின்றேன்

நன்றி

"தன் சுடர் கொண்டு பிறர் சுடர் பிரகாசிக்க செய்வதே கற்றோரின் பண்பு" - (இரவீந்திரநாத் தாகூர்)

**K**.இராசலிங்கம்
அதிபர்.
பிரின்சஸ் தமிழ் வித்தியாலயம்.
கோணப்பிட்டிய கந்தப்பளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அன்பான மாணவ,மணிகளுக்கு!

கலாசாலைத் தலைமை ஆசிரியர் திரு.இராசலிங்கம் அவர்கள் தலைமையில் நடந்து வரும் கோணப்பிட்டிய பிரின்சஸ்(Princess) தமிழ் வித்தியாலயத்தில் கற்று வரும் மாணவர்,மாணவிகளுக்கு நானாகிய இலங்கையில் கோணப்பிட்டியவில் பிறந்து சுவீடன் நாட்டில் கல்வி கற்று மருத்துவராய் தொழில் புரியும் Dr.சந்தனம் வெளியிடும் நற்செய்தி ஒன்று

இப்பாடசாலையில் கற்கும் நீங்கள் யாவரும் கல்வியில் வெற்றி பெற்று, உயர்ந்த நிலையை அடைந்து இந்த சமுதாயத்தையும் உயர்த்த வேண்டும் என்பதே எனது ஆசை. ஆதலால் இப்பாடசாலையில் 9ம் வகுப்பு தொடக்கம் ஒவ்வொரு வருடமும் இறுதி பரீட்சையில் குறைந்த பட்சம் $\frac{2}{3}$ பங்கு புள்ளி பெற்று சித்தியடையும் ஓர் ஆண் மாணவனுக்கும் ஓர் பெண் மாணவிக்கும் புலமை பரிசில் (Scholorship) பணமாக வழங்கப்படும்.

**இது கீழ் காணும் வகையில் வழங்கப்படும்.**

ஆண்டு 09 முடிவில் ரூ 5000
ஆண்டு 10 முடிவில் ரூ 7500
ஆண்டு 11 முடிவில் ரூ 15000

அத்துடன் அப்படி திறமையாக சித்தியடைந்து தொடர்ந்து ஆண்டு 12(A/L) படிக்கவும், அதில் சித்தியடைந்து பல்கலைக்கழகம்(University) சென்று படிக்கவும் இப்புலமைப்பரிசில் மூலம் வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

பல்கலைக்கழகம் போகத் தேர்வுபெற்ற மாணவர்களுக்கு இரண்டு வாரங்களுக்கு இந்தியா சென்று வரும் வாய்ப்பும் ஏற்பாடு செய்யப்படும். அதே போல் O/L, A/L இறுதி பரீட்சைகளில் இலங்கையில் திறமைப் பெற்ற 10 மாணவர்கட்குள் அடங்கினால், அவர்களுக்கும் இந்தப் பிரயாண சந்தர்ப்பம் வழங்கப்படும்.

**மாணவ, மாணவிகளுக்கு மட்டுமல்ல**

திறமையான ஆசிரியர்/ஆசிரியை என்று தேர்ந்தெடுக்கப்படும் ஆசிரியர்/ ஆசிரியைக்கும் இந்தியப் பிரயாணம் செல்வதற்கு புலமைப்பரிசில் வழங்கப்படும்.

மேற்கூறிய சம்பவங்கள் ஒவ்வொரு வருடமும் நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

மாணவனே! மாணவியே!
கல்வியை திரட்டு
வறுமையை விரட்டு
துயரற்ற வாழ்வை நிலைநாட்டு.

Dr.அருள்சந்தனம்
சுவீடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

கோணப்பிட்டிய பிரின்சஸ் தமிழ் வித்தியாலய வரலாற்றில் பொன் எழுத்துக்களில் பொறிக்க வேண்டிய ஒரு நன்னாளே இந்நாள் இப்பிரதேசத்தில் இயங்கிவரும் தமிழ் பாடசாலைகளுக்கு முன் உதாரணமாய் இன்று இப்பாடசாலையிலிருந்து வெளிவரும் தளிர்களின் நூலான சாளரம் எனும் நூலுக்கு பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் சார்பில் ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

இப்பாடசாலையின் வரலாற்றில் யாருமே கனவில் கூட நினைத்து பார்த்திராத விடயத்தினை இன்று இப்பாடசாலை அதிபரும் ஆசிரியர்களும் இணைந்து செயல்படுத்தி வெற்றி கண்டு வீறு நடை போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.இனி வரும் ஒவ்வொரு வருடமும் ஒரு நூலை இப்பாடசாலை பிரசவிக்க வேண்டும் என மனமாற வாழ்த்துகிறேன் இதற்கு பாடசாலை அபிவிருத்தி சங்கமானது தனது முழு ஒத்துழைப்பினை சளைக்காது வழங்கும் எனதெரிவித்துக் கொண்டு நல்லாசிகள் வழங்குகின்றேன்

''அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு''

K.பாலகிருஸ்ணன்
செயலாளர்
பாடசாலை அபிவிருத்தி சங்கம்
பிரின்சஸ் த.வி, கோணப்பிட்டிய
கந்தப்பளை

---

கோணப்பிட்டிய பிரின்சஸ் தமிழ் வித்தியாலயத்தின் புதிய கட்டிட திறப்பு விழாவோடு,பாடசாலை மாணவர்களினதும்,ஆசிரியர்களினதும் பல்வேறு ஆக்கங்களை சுமந்து வருகின்ற இந்நூலுக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

கடந்த சில ஆண்டுகளாக பாடசாலையில் நடைபெற்று வரும் பல்வேறு அபிவிருத்தி செயற்பாடுகளில் இப்பாடசாலையின் பழைய மாணவர் என்ற ரீதியில் எங்களின் பல்வேறு வகையிலான ஒத்துழைப்பை நல்கி வருகின்றோம். அந்த வகையில் இவ்வருடம் வெளிவரும் சாளரம் என்ற நூலானது இனி ஆண்டு தோறும் வெளிவந்து வெற்றி நடைபோட எமது ஆசியினையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.அத்தோடு மாணவர்களை கல்வியின் பால் சிறந்து விளங்கவும் புதிய ஆக்க முயற்சிகளில் ஈடுபடவும் இது வழிதோன்றும் என்பதில் சந்தேகமில்லை.

''வாழ்க உன் செயல் வளர்க உன் பணி''

M.புவனேந்திரன்
செயலாளர்
பழைய மாணவர் சங்கம்
பிரின்சஸ் த.வி, கோணப்பிட்டிய
கந்தப்பளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புள்ள ஆசிரியரே,

"அனைத்து மனிதர்களும் நியாயமானவர்கள் அல்லர் என்பதையும் அனைத்து மனிதர்களும் நேர்மையானவர்கள் அல்லர் என்பதையும் எனது மகன் தெரிந்து கொள்ள வேண்டும். ஆயினும் மோசமான மனிதர்களுக்கிடையேயும் வீரர்களும் சுயநலமான அரசியல் வாதிகளுக்குள்ளும் சேவை மீது அர்ப்பணிப்புள்ள பொதுநலன் பேணும் தலைவர்களும் இருக்கிறார்கள் என்பதை அவனுக்குச் சொல்லிக் கொடுங்கள். நியாயமான உழைத்த ஒரு டொலர்; அநியாயமாகப் பெறும் ஆயிரம் டொலர்களை விட பெறுமதி வாய்ந்ததெனவும் முடிந்தால் அவனுக்குச் சொல்லிக் கொடுங்கள். இழப்புகளையும், நிந்தனைகளையும் பொறுத்துக் கொள்ளவும் புகழை கர்வமின்றி அனுபவிக்கவும் அவனுக்குக் கற்றுக் கொடுங்கள். மற்றவர்களைத் துன்புறுத்துபவர்களால் மட்டுமே பொறாமை மூலம் தோல்வியடையச் செய்யவும், வேதனைப்படுத்தவும் முடியும் என்பதை ஆரம்பத்திலேயே கற்றுக் கொள்ள அவனுக்கு வழிசெய்யுங்கள்.

உங்களுக்கு முடியுமானால் புத்தகங்களின் வியத்தகு தன்மையை அவனுக்குக் கற்றுக் கொடுங்கள். ஆகாயத்தில் பறக்கும் பறவைகள், சூரிய ஒளியில் ரீங்காரமிடும் தேனீக்கள், பசுமையான மலைச் சாரல்களில் பூத்துக் குலுங்கும் மலர்கள் ஆகியவற்றின் இயற்கை அழகினை நுகர்வதற்கு அவனுக்கு அவகாசம் வழங்குங்கள். எல்லோரும் பிழை என்று கூறினாலும் கூட தனது கருத்தில் நம்பிக்கையுடன் இருப்பதற்கு அவனுக்கு தைரிய மூட்டுங்கள். மிருதுவானவர்களுடன் மிருதுவாக நடந்து கொள்ளவும், கடுமையா -னவர்களுடன் மிகக் கடுமையாக நடந்து கொள்ளவும் அவனுக்குக் கற்றுக் கொடுங்கள். எல்லோரும் ஓடும் திசையில் தானும் ஓடி பிரபல்யத்தைப் பெற்றுக் கொள்வதை விடுத்து கண்மூடித்தனமாகக் பின்தொடராது இருப்பதற் -கான பலத்தை எனது மகனுக்கு வழங்குங்கள். சகல மனிதர்களுக்கும் செவிசாய்ப்பதற்கு அவனுக்கு கற்றுக் கொடுங்கள். ஆனால் செவிமடுக்கும் விடயங்களை உண்மை என்ற சல்லடையில் சலித்தெடுத்துக் கொள்வதற்கு அவனுக்குக் கற்றுக் கொடுங்கள். கண்ணில் கண்ணீருக்கு மத்தியில் ஒரு புன்னகையை வரவழைப்பதில் கவனமாக இருக்க அவனை அறிவுறுத்துங்கள். தனது உடல் பலத்தையும் நுண்ணறிவையும் அவற்றின் பெறுமதியைகணித்து கொடுக்கவும், ஆனால் தனது இதயத்தை ஒருவருக்கும் ஒருபோதும் விலை பேசாதிருக்கவும் அவனுக்குச் சொல்லிக் கொடுங்கள்.

கூக்குரலிட்டு அமைதியைக் குலைக்கும் பிரிவினர்களுக்கு மத்தியில் காதுகளைப் பொத்திக் கொள்ளவும், தான் சரியென நினைக்கும் விடயத்தில் துணிச்சலாகப் போராடவும் அவனுக்கு கற்றுக் கொடுங்கள். ஏனெனில் சிறந்த உருக்கு விறந்த நெருப்புச் சுவாலையிலிருந்து தான் உருவாகிறது. வீரம் என்பது அவனுக்குப் பொறுமையாக கிடைக்க வேண்டியது என்பதைச் சொல்லிக் கொடுங்கள். தன்னைப் பற்றி உயர்வான தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ள அவனுக்கு கற்பியுங்கள். ஏனெனில் அப்போதுதான் மனிதர்கள் மீது அவனால் மேலான நம்பிக்கையை ஏற்படுத்திக் கொள்ள முடியும். எனது மகன் சுறுசுறுப்பான ஒரு சிறு பையன். அவனுக்காக உங்களால் செய்ய முடியுமானதைச் செய்யுங்கள்.

ஆபிரகாம் லிங்கன்

அமெரிக்காவின் முன்னாள் சிறந்த ஜனாதிபதிகளில் ஒருவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாறு

மத்திய மாகாணத்தின் நுவரெலியா பிரதேசத்தில் ஹங்குராங்கெத்த கல்வி வலயத்தில் அமைந்துள்ள சுமார் **225** மாணவர்களுடன் தரம்**1-9** வரை வகுப்புக்களைக் கொண்ட பாடசாலையே கோணப்பிட்டிய தமிழ் வித்தியாலய மாகும்.

இப்பாடசாலையின் ஆரம்பம் பற்றிய உத்தியோகப்பூர்வ பதிவுகள் இல்லாவிட்டாலும் கூட 1930 களில் ஆரம்பிக்கப்பட்டதற்கான உத்தியோகப் -பற்றற்ற சான்றுகள் கிடைத்துள்ளன. அதன்படி இப்பாடசாலையின் முதல் பொறுப்பாசிரியர் திரு.செல்லையா என்பவராவார். அவர்களது காலத்தின் பின்பு திரு.D.G.மோசஸ் என்பவர் கோணப்பிட்டிய தோட்ட குமாஸ்தாவாகவும் பாடசாலைகளில் கற்பித்தல் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளார். **1961.03.09** ஆந்திகதியிலிருந்து இப்பாடசாலை உத்தியோகப்பூர்வ ஓருசில பதிவேடுகள் காணப்படுகின்றன. இதன்படி திரு.ரபைதீன், திரு.K.S. ஆண்டிஐயா, திருமதி. E. இனோக் திரு.M. ஆனந்தராஜா, திருமதி.N. நிர்மலாதேவி, திரு.K.மனோகரன், திரு.S.பிரங்லின், திரு.K.ஜெயரட்ணம், திரு.K.இராசலிங்கம் (தற்போதைய அதிபர்) இப்பாடசாலையின் வளர்ச்சிக்காக பங்களிப்பு செய்துள்ளனர்.

**1977.06.14** முதல் அரச பாடசாலையாக பொறுப்பேற்கப்பட்ட பின்னர் கோணப்பிட்டிய தோட்ட நிர்வாகத்தின் மேலாண்மை நீக்கப்பட்டுள்ளது இக் காலப்பகுதியில் கோணப்பிட்டிய இல II - விராலிகல தமிழ் பாடசாலையை -யும் ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டு இப்பாடசாலை கோணப்பிட்டிய தோட்ட மத்திய பகுதியிலுள்ள பழைய கட்டிடத்திலே கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

தொடர்ந்து முன்னாள் கல்விப்பணிபாளர் திரு.மரியதாஸ், முன்னாள் அதிபர் திரு.K.ஜெயரட்ணம் ஆகியோரின் முயற்சியில் I.R.D.P. நிறுவனத்தால் குட்வூட் வழியிலுள்ள தேயிலைக்காணியில் **90 X 20** அடி அளவிலான கட்டிடம் அமைக்கப்பட்டுள்ளது. தரம் **1-5** வரையான வகுப்புக்களுடன் இப் பாடசாலை இயங்கியுள்ளது. சுமார் 7 தசாப்தங்களுக்கு பிறகு இப்பாடசாலை ஓரளவு அடிப்படை வசதிகளை பூர்த்தி செய்துக் கொள்ளக்கூடிய வகையில் **2002**ம் ஆண்டின் இறுதியில் முன்னாள் ம.மா. கல்வி அமைச்சர் கௌரவ V.இராதகிருஷ்ணன் அவர்களின் முயற்சியினால் குடிநீர், மலசல கூட வசதிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டது. இக் காலப்பகுதியிலேயே கௌரவ முன்னாள் அமைச்சர் S.B.திசானாயக்க அவர்களின் உதவியுடன் மலக்கூடம் அமைக்கப் -பட்டது. **2003**ம்ஆண்டில் கௌரவ அமைச்சர் C.B.ரட்னாயக்க அவர்களால் எல்லையைச் சுற்றி வேலி அமைத்துக் கொடுக்கப்பட்டது.

**2004** ஆம் ஆண்டில் கல்வி அமைச்சின் உதவி செயலாளர் திரு.J.S.J. ஜோசப் மற்றும், பாடசாலைகள் கட்டிடப் பிரிவு பொறியியலாளர் திரு.சுரேஷ் அவர்களின் விசேட முயற்சியினால் பாடசாலைக்கான நுழைவாயில் மின்சாரவசதி, விடுதி திருத்தம் மேற்கொள்ளப்பட்டன. **2005**ம் ஆண்டில் பாடசாலைக் கட்டிடத்திற்கான மின் கம்பி இணைத்தல், பழைய கட்டிடத் திருத்தம் என்பன மேற் கொள்ளப்பட்டன. இக் காலப்பகுதியில் கௌரவ சமூக அபிவிருத்தி.அமைச்சர் சந்திரசேகரன் அவர்களால் சிறுவர் பூங்கா அமைத்துக் கொடுக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2004**ம் ஆண்டு வரை தரம் **1-5** வரை இயங்கிய இப் பாடசாலை **2005**ம் ஆண்டு முதல் தரம் **1-9** வரை வகுப்புக்களைக் கொண்ட இடைநிலைப் பாடசாலையாகக் தரமுயர்த்தப்பட்டது. சகல வகுப்புக்களும் 90X20 அடி அளவிலான கட்டிடத்தில் இடப்பற்றாக்குறைக்கு மத்தியில் வகுப்புக்கள் நடைபெற்றன கட்டிடம் தேவை சம்பந்தமாக உரிய அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டும் கிடைக்காத காரணத்தால் **2006**ம் ஆண்டில் தற்காலிக குடில் அமைக்கப்பட்டு தரம் **7,8** வகுப்புக்கள் நடாத்தப்பட்டன.

**2006** ஆம் ஆண்டு மத்திய கல்வி அமைச்சின் "லீட்" செயற்திட்டத்-தினூடாக மத்திய மாகாண கல்வி. அமைச்சர்.கௌரவ திரு.S.அருள்சாமி, முன்னாள் வலயக்கல்விப்பணிப்பாளர் திரு.ரஞ்சித் நீலவத்துர. தமிழ்ப் பிரிவு கல்விப் பணிப்பாளர் திரு.M.சோமசுந்தரம், பெற்றோர், ஆசிரியர் ஆகியோரின் அயராத முயற்சியின் பயனாக இப்பாடசாலைக்கு 90X25 அடி அளவிலான இருமாடிக் கட்டிடத்தின் முதலாவது கட்டம் நிறைவு பெற்றுள்ளது.

இக்காலப்பகுதியில் தேசிய ஒருங்கிணைப்பு பிரதி அமைச்சர் கௌரவ S.ஜெகதீஸ்வரன் அவர்களால் ரோனியோ இயந்திரம் ஒன்று பெற்றுக் கொடுக்-கப்பட்டது. அத்துடன் கோணப்பிட்டிய தோட்ட நிர்வாக உத்தியோகஸ்தர் திரு.S.கணேஷன் அவர்களால் பாடசாலைக்கு தொலைபேசி இணைப்பு பெற்றுக் கொடுக்கப்பட்டது.

### பிரின்சஸ் தமிழ் வித்தியாலயம் என பெயர் மாற்றம்

இதுவரை கோணப்பிட்டிய இல-1த.வி. என அழைக்கப்பட்ட இப்பாடசாலை **2007** ஆண்டு ஆனி மாதம் **1**ம் திகதி முதல் **பிரின்சஸ் தமிழ் வித்தியாலயம்** என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.இதற்கான பெயர்ப்பலகை ம.மா.கல்வி அமைச்சினூடாக அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது.

### கொடிக்கம்பம்

பாடசாலைக்கான கொடிக்கம்பத்திற்காக கோணப்பிட்டிய தோட்ட திரு.ராமு என்பவர் (தலைவர்) இரும்பு பைப்கள் வழங்கியுள்ளார்.தொழிற்சாலை அதிகாரி திரு. நவரட்ணசிங்கம் அவர்களின் அனுசரணையுடன் திரு.காசி, திரு.ஜுலி ஆகியோரின் நிர்மாணிப்பின் மூலம் கொடிக்கம்பம் அமைக்கப்பட்டு ஆசிரியர்களினால் ஒருங்கமைக்கப்பட்டது.

## கல்வி மற்றும், இணைப்பாடவிதான செயற்பாடுகள்




### கல்வி

எழுத்து வாசிப்பு பேச்சு ஆகியவற்றிற்கு கூடிய முக்கியத்துவம் கொண்ட செயற்பாடுகளை காலைக் கூட்டங்களிலே திங்கள் முதல் புதன் வரை ஆங்கில உரையாடல் நிகழ்வுகளும் வியாழன்,வெள்ளி தமிழ் உரையாடல் நிகழ்வுகளும் மாணவர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.இலக்கிய மன்றம் (தமிழ், ஆங்கிலம்) இந்துமன்ற பிரிவுகள் மாதத்தில் ஒரு முறை நடாத்தப்பட்டு வருகின்றது.பத்திரிகைகளுக்கு ஆக்கங்களை எழுதத்தூண்டுதல் போன்றவற்றினாலும் மாணவர்களின் முன்னேற்றம் குறிப்பிடத்தக்க வளர்ச்சிப் போக்கை காட்டி நிற்கின்றன. மாணவர்களுக்கு கற்பதற்கு ஏற்ற வீடு,சுற்றாடல், ஒழுங்கு மிக மோசமான நிலையிலிருப்பதாலும் மாணவர்களின் கல்வியில் பெற்றோரின் பங்கு போதாத காரணத்தாலும் மிகச்சிறந்து பிரகாசிக்க வேண்டிய எத்தனையோ குழந்தைகள் கல்வியில் முன்னேற முடியாததாயிருக்-கின்றனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைப்பாடவிதான நடவடிக்கைகள்

மிக நீண்ட காலத்திற்கு பின்பு **2003, 2005** ம் ஆண்டுகளில் விளையாட்டுப் போட்டி சிறப்பாக நடாத்தப்பட்டது. இந்த இரண்டு ஆண்டுகளின் போதும் விளையாட்டுப் போட்டிக்காக நுவரெலியா மாவட்ட பதில் நீதவானும் சட்டத்தரணியுமாகிய திரு.P.இராசதுரை அவர்களின் பங்களிப்பு அளப்பரியதாக காணப்பட்டன. போட்டியில் வெற்றியீட்டிய அனைத்து வீரர்களுக்கும் சுமார் 100ற்கு மேற்பட்ட வெற்றிக் கிண்ணங்களை பெற்றுத் தந்து விளையாட்டுப் போட்டி சிறக்க உதவியுள்ளார். பாடசாலையின் விளையாட்டுப் போட்டிகள் இரண்டு ஆண்டுக்கொரு முறை விழாவாகவும் மற்ற ஒவ்வொரு வருடமும் போட்டிகள் நடாத்தப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. பாடசாலை நாட்களில் எல்லா வகுப்புக்களுக்கும் திங்கள் முதல் புதன் வரை தலா ஒவ்வொரு பாடவேளைகளில் சுவட்டுப்பயிற்சிகளிலும் வியாழன் முதல் வெள்ளி வரை மைதான விளையாட்டுப் பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன.

## பாடசாலை இல்ல விளையாட்டுப்போட்டி

"ஒரு சில மாணவர்களின் விசேட திறமை
மற்றவர்களைத் திருத்தப் பயன்படாது"

– R.D.லெயிங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகில இலங்கை தமிழ்மொழித்தினப் போட்டியில் மாணவர்கள் வலய மட்டத்தில் பல வெற்றிகளைப் பெற்று பாடசாலைக்கு பெருமைச் சேர்த்து ள்ளனர். **2005/ 2006**ம் ஆண்டுகளில் மாகாண மட்டத்திற்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.


## கணினிக்கல்வி

கோணப்பிட்டிய தோட்டத்தில் பிறந்தவரும் தற்போது சுவீடனில் வசிப்பவருமான Dr. அருள்சந்தனம் அவர்கள் இப்பிரதேசத்தில் கல்வி முன்னேற்றத்திற்காக முன்பள்ளி செயற்பாட்டுக்கு முழு உதவியையும், செய்வதோடு இப் பாடசா -லைக்கு இரண்டு கணினிகளைப் பெற்றுத் தந்துள்ளார். அத்துடன் பாடசாலை கலை நிகழ்வில் சிறந்து விளங்கிய தரம் 8ஐச் சேர்ந்த M.அதிஸ்டன் என்ற மாணவனுக்கு இந்திய சுற்றுலாவிற்கான புலமைப்பரிசிலொன்றையும் பெற்றுக் கொடுத்துள்ளார்

மேலும் எதிர்காலத்தில் 9,10,11ஆம் வகுப்புக்களில் வகுப்பேற்றப் பரீட்சையில் 65% இற்கு மேற்பட்ட புள்ளிகளைப்பெறும் (ஆண், பெண் இரண்டு பேருக்கும்) மாணவர்களுக்கு முறையே ரூபா 5000, 7500 ,15000 தருவதாகவும், உயர் கல்விக்குத் தெரிவானால் (க.பொ.த (உ/த), பல்கலைக்கழக கல்விச் செலவுகளுக்காக புலமைப்பரிசிலும், இந்திய சுற்றுலாவிற்கான புலமைப் பரிசிலும் தருவதாக உறுதியளித்துள்ளார்.

மேலும் பாடசாலை கல்வி மற்றும் அபிவிருத்தியில் சிறப்பாக பங்காற்றும் ஆசிரியர்களில் வருடத்திற்கு ஒருவர் என்ற அடிப்படையில் இந்திய சுற்றுலாவிற்கான புலமைப்பரிசில் தருவதற்கும் உறுதியளித்துள்ளார். இதைப் போன்ற உயர்ந்த உள்ளங்களின் உதவி இப்பாடசாலையின் உயர்ச்சிக்கும் உதவுவதாக அமையுமென நம்புகிறேன்.

**கணினி கையளிப்பு ►**



மேலும் கடந்த காலங்களில் நவராத்திரிவிழா, தரம்-1ற்கான வரவேற்பு விழா, கலைவிழா, கல்விச்சுற்றுலா, அடிக்கல் நாட்டுவிழா என்பன வெற்றிகரமாக செய்யப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி சுற்றுலா ▶




## பாடசாலை கீதம், சின்னம், கொடி.

பாடசாலைக்கான சின்னம், பாடசாலைக்கான கீதம் பாடசாலை கொடி என்பன இராகலை தமிழ் மகா வித்தியாலய பிரதி அதிபர் திரு.M.பன்னீர்செல்வம் அவர்களின் உதவியோடு ஆக்கம் செய்யப்பட்டன.
இவை நடந்தவை

## இனி நடக்க வேண்டியவை

01. பாடசாலை தரம் 11 வரை உயர்த்துதல்.
02. புதிய கட்டிடத்தின் மேல் மாடி அமைத்தல்
03. அதிபர்/ஆசிரியர் விடுதி அமைத்தல்
04. பாதுகாப்பு வேலி, பாதை அமைத்தல்
05. கணினி அலகு, தொலைபேசி, மின்னஞ்சல்,
06. உள்ளகத் தொடர்பாடல் முறை.

## பாடசாலைக்குத் தேவையான உபகரணங்கள்

தளபாடங்கள்,
ஒலிப்பெருக்கி
கணினிகள்/ பிரதியியந்திரம் O.H.P
நூலக தளபாடங்கள்
கற்றல், கற்பித்தல் சாதனங்கள்

இப்பாடசாலையின் ஓர் நேரான வளர்ச்சிப் போக்கிற்கு பிரதான காரணகர்த் தாக்களாக இருந்தவர்கள் என்றுமே என்நினைவில் நீங்கா ஆசிரிய உள்ளங் களான அன்புக்கும், மரியாதைக்குமுரியவர்களான திருமதி.S.கணேசன், திரு.A.இராஜேந்திரன், திரு.G.விக்டர், திரு.A.சதீஸ்குமார், திருமதி.S.சசிக்கலா, திரு.V.கோபிநாத், செல்வி.N.புனிதவதி, திரு.K.கேதீஸ்வரன் ஆகியோருக்கும் கோட்டக் கல்வி பணிப்பாளர் திரு.M. சோமசுந்தரம் அவர்கட்கும் எனது உளங்கனிந்த நன்றிகளையும், பாராட்டுகளையும், தெரிவித்து இவ்விழாவில் அவர்களின் சேவையை கௌரவிக்கின்றேன்.


அதேபோல் பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் எனது நன்றியை நவில்கின்றேன்.

நன்றி

K.இராசலிங்கம்
அதிபர்
பிரின்சஸ் தமிழ் வித்தியாலயம்,
கோணப்பிட்டிய,- கந்தப்பளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையின் அமைவிடப்படம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேவையாற்றிய அதிபர்கள் விபரம்

01. திரு.செல்லையா
02. திரு.மோசஸ்
03. திரு.K.S.ஆண்டியையா
04. திரு.ரபாய்தீன்
05. திருமதி. E.இனோக்
06. திரு.M.ஆனந்தராஜா
07. திருமதி.N.நிர்மலாதேவி
08. திரு.K.மனோகரன்
09. திரு.S.பிரங்லின்
10. திரு.K.ஜெயரட்ணம்

## சேவையாற்றிய ஆசிரியர்கள் விபரம்

01. திரு.S.அருள்குமார்
02. திருமதி.A.பஞ்சபாக்கியம்
03. திரு.K.ரட்ணசாமி
04. திருமதி.S.சரோஜா
05. திருமதி.சித்தி அமிசியா
06. திருமதி.K.லோகலெச்சுமி
07. திருமதி.G.C.தணசுந்தரி
08. திரு.K.சிரிகுமார்
09. திரு.K.சதாசிவம்
10. திரு.S.நிர்மலாதேவி
11. திரு.R.ரவிச்சந்திரன்
12. திரு.S.மெடோன்சா
13. திருமதி.R.வைஜயந்திமாலா
14. திரு.A.அருள்நேசன்
15. திரு.S.சத்தியமூர்த்தி
16. திரு.T.மணிவன்னண்

## சேவையாற்றிய தொண்டர் ஆசிரியர்கள்

செல்வி.S.சுமதி
செல்வி.M.துசிதாதேவி
செல்வி.S.மங்களகௌரி
செல்வி.S.வசந்தமலர்
செல்வி.L.G.தம்மிகா
செல்வி. தீபா
செல்வி. சுபாசினி

பாடசாலை என்பது கவரும் கட்டிடம்,நான்கு சுவர்களால் மூடப்பட்டுள்ளது
தூரத்தே பார்த்தால் நாளைய உலகிற்கான உலகம் உள்ளது.

பிராங்லின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தற்போதைய அதிபர்

திரு.K.இராசலிங்கம்

## தற்போதைய ஆசிரியர்கள்

01. திருமதி.S.கணேசன்
02. திரு.A.ராஜேந்திரன்
03. திரு.G.விக்டர்
04. திரு.A.சதீஸ்குமார்
05. திருமதி.S.சசிகலா
06. செல்வி.N.புனிதவதி
07. திரு.V.கோபிநாத்
08. திரு.K.கேதீஸ்வரன்

## பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| தலைவர் | :- | திரு.K.இராசலிங்கம். |
| உபதலைவர் | :- | திரு.A.இராஜேந்திரன். |
| செயலாளர் | :- | திரு.K.பாலகிருஷ்ணன். |
| உபசெயலாளர் | :- | திரு.A.சதீஸ்குமார். |
| பொருளாளர் | :- | திருமதி.S.கணேசன் |

## குழு உறுப்பினர்கள்

திரு.S.ராஜரட்ணம்.
திரு.S.கிருஷ்ணமூர்த்தி
திருமதி.R.சிவபாக்கியம்.
திரு.S.கந்தையா.
திரு.P.கஜேந்திரன்.
திரு.K.தவராஜ்
திருமதி.K.அமுதா
திருமதி.P.சீதாலெட்சுமி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர் தலைவர்கள்

| ஆண்கள் | பெண்கள் |
|---|---|
| P. மகேஸ்வரன் | V. வசந்தகுமாரி |
| B. மன்சூர்காந்த் | R. உமாபிரியாணி |
| K. சுரேஷ் | R. மணிமேகலா |
| B. விநோதன் | T. கலாதேவி |
| M. ஹதிஸ்டன் | K. ஆதிசலா |
| R. ரமணிதரன் | K. மேகலா |
| B. சருன்காந்த் | R. சசிகலா |
| M. சந்திரசிவா | B. சகுந்தலா |
| R. சிவகுமார் | |
| S. ராஜகுவரன் | |
| A.சஞ்ஜீவகுமார் | |

## வகுப்புத் தலைவர்கள்

| தரம் | ஆண்கள் | பெண்கள் |
|---|---|---|
| 01 | M.தினேஸ்ராஜ் | J.திலினிகஸ்மியா |
| 02 | K.கோடீஸ்வரன் | K.சர்மிளா |
| 03 | S.நவநீதன் | R.சர்மிளா |
| 04 | C.அமிர்தலிங்கம் | R.விஜயலட்சுமி |
| 05 | S.பிரபுதேவா | K.ஜனனி |
| 06 | T.புண்ணியமூர்த்தி | K.திலானி |
| 07 | S.பிரசாந்தன் | M.சரிதாபிரியதர்ஷினி |
| 08 | R.பிரசாந்தன் | K.மஞ்சுளா |

## இலக்கியமன்ற நிர்வாகக்குழுக்கள்

### தமிழ் இலக்கியமன்றம்

| | |
|---|---|
| தலைவர் | - R.சிவகுமார் |
| உபதலைவர் | - B.மன்சூர்காந்த் |
| செயலாளர் | - R.ரமணிதரன் |
| உபசெயலாளர் | - P.மகேஸ்வரன் |
| பொருளாளர். | - G.தமிந்தன் |

**உறுப்பினர்கள்**

K.ஜனனி
R.உமாபிரியாணி
R.மணிமேகலா
B.விநோதன்.

### ஆங்கில இலக்கியமன்றம்

| | |
|---|---|
| தலைவர் | - M.அதிஸ்டன் |
| உபதலைவர் | - K.மேகலா |
| செயலாளர் | - S.ராஜகுவரன் |
| உபசெயலாளர் | - D.கலாதேவி |
| பொருளாளர். | - V.வசந்தகுமாரி |

**உறுப்பினர்கள்**

S.வாசுதேவி
R.கோகிலாதேவி
B.சருன்காந்த்
B.சகுந்தலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்துமாமன்றம்

தலைவர் - B.விநோதன்
உபதலைவர் - D.சதீஸ்குமார்
செயலாளர் - M.சந்திரசிவா
பொருளாளர். - K.ஆதிசலா

உறுப்பினர்கள்
B.தினேஸ்குமார்
R.விநோ
K.திலானி
G.தினேஸ்குமார்
S.கனகா

## 2005 அகில இலங்கை தமிழ் மொழித்தின போட்டியில் வலயமட்டத்தில் வெற்றிபெற்றோர்

| பெயர் | பிரிவு | நிகழ்வு | இடம் |
|---|---|---|---|
| S.இராஜகுவரன் | II | வாசிப்பு | 1 |
| R.ரமணிதரன் | II | பேச்சு | 1 |
| M.யசோதன் சிவகாந்தன் | II | பாவோதல் | 1 |
| M.அதிஸ்டன் | II | எழுத்தாக்கம் | 2 |
| V.வசந்தகுமாரி | I | எழுத்தாக்கம் | 3 |
| R.மணிமேகலா | I | பாவோதல் | 3 |

## 2006 அகில இலங்கை தமிழ்மொழித்தின போட்டியில் வலயமட்டத்தில் வெற்றி பெற்றோர்

| பெயர் | பிரிவு | நிகழ்வு | இடம் |
|---|---|---|---|
| V.வசந்தகுமாரி | I | பாவோதல் | 2 |
| P. மகேஸ்வரன் | I | கதைகூறல் | 2 |
| B.மன்சூர்காந் | II | வாசிப்பு | 1 |
| M.யசோதன் சிவகாந்தன் | II | பேச்சு | 1 |
| M.அதிஸ்டன் | II | பாவோதல் | 1 |
| R.ரமணிதரன | II | கட்டுரை | 2 |

| | | |
|---|---|---|
| திறந்த போட்டி | நாடகம் | 1 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர்களின் அமைவிடம்

| பிரிவு | மாணவர் தொகை | பாடசாலைக்குள்ள தூரம் |
|---|---|---|
| சீனாப்பிட்டிய | 05 பேர் | 3Km |
| கோணப்பிட்டிய | 165 பேர் | 1Km |
| புதுக்காடு | 25 பேர் | 3.5Km |
| 5ம் நம்பர் | 20 பேர் | 3Km |

## மாணவர் விபரம்

| தரம் | ஆண் | பெண் | இந்து | கிறிஸ்தவம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | 11 | 15 | 25 | 01 | 26 |
| 2 | 12 | 11 | 23 | 00 | 23 |
| 3 | 16 | 16 | 31 | 01 | 32 |
| 4 | 14 | 09 | 23 | 00 | 23 |
| 5 | 13 | 13 | 25 | 01 | 26 |
| 6 | 13 | 13 | 26 | 00 | 26 |
| 7 | 16 | 13 | 26 | 03 | 29 |
| 8 | 17 | 13 | 29 | 01 | 30 |
| மொத்தம் | 112 | 103 | 208 | 07 | 215 |

## ஆசிரியர் விபரம் (2003/38 சுற்றறிக்கைப்படி)

| ஆசிரியர்வகை | தேவை | இருப்பது | தேவை |
|---|---|---|---|
| அதிபர் | 01 | 01 | – |
| ஆரம்பஆசிரியர் | 05 | 07 | – |
| ஆங்கிலம் | 02 | – | 02 |
| விஞ்ஞானம், கணிதம் | 02 | – | 02 |
| பொது | 02 | – | 02 |
| தொழிநுட்பம் | 01 | 01 | – |
| இரண்டாம்மொழி | 01 | – | 01 |
| அழகியல் | 01 | – | 01 |
| மொத்தம் | 15 | 09 | 08 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர் அனுமதி

| வருடம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 1995 | 21 | 33 | 54 |
| 1996 | 11 | 13 | 24 |
| 1997 | 11 | 15 | 26 |
| 1998 | 11 | 20 | 31 |
| 1999 | 15 | 25 | 40 |
| 2000 | 18 | 21 | 39 |
| 2001 | 22 | 14 | 36 |
| 2002 | 10 | 16 | 26 |
| 2003 | 15 | 12 | 27 |
| 2004 | 13 | 14 | 27 |
| 2005 | 14 | 14 | 28 |
| 2006 | 14 | 11 | 25 |
| 2007 | 13 | 17 | 30 |

## இப்பாடசாலை அபிவிருத்தியில் நேரடியாக பங்குகொண்ட மக்கள் பிரதிநிதிகளும், நலன்விரும்பிகளும்.

| பெயர் | வேலைத்திட்டம் |
|---|---|
| 01.கௌரவ அமைச்சர் சௌ.தொண்டமான் அவர்கள் | பாடசாலை காணி பெறுவதற்கு பொதுச்சட்டம் கொண்டு வந்தமை I.R.D.P. கட்டிடத்திற்கான சிபாரிசு |
| 02.கௌரவ அமைச்சர் வி.இராதாகிருஷ்ணன் அவர்கள் | அடிப்படை வசதிகள் |
| 03.கௌரவ அமைச்சர் எம். சிவலிங்கம் அவர்கள் | நூலக புத்தகங்கள் |
| 04.கௌரவ அமைச்சர் சி.பி.ரத்னாயக்க அவர்கள் | பாதுகாப்பு வேலி |
| 05.கௌரவ முன்னாள் பா.ம.உறுப்பினர் எஸ்.சதாசிவம் அவர்கள் | நூலகபுத்தகங்கள், விடுதி திருத்தம் |
| 06.கௌரவ அமைச்சர் வி.இராதாகிருஷ்ணன் அவர்கள | நுழைவாயில் விடுதி திருத்தம், மலசல கூட படிக்கட்டு, மின்சாரம் |
| 07.கௌரவ அமைச்சர் சந்திரசேகரன் அவர்கள் | சிறுவர் பூங்கா |
| 08.டாக்டர் திரு.அருள்சந்தனம் அவர்கள் | கணினி அன்பளிப்பு |
| 09.கௌரவ அமைச்சர் எஸ்.அருள்சாமி அவர்கள் | இரண்டு மாடிக்கட்டிடத்தின் முதல் கட்டம் |
| 10.கௌரவ அமைச்சர் எஸ்.ஜெகதீஸ்வரன் அவர்கள் | ரோனியோ இயந்திரம் |
| 11.திரு.P.இராஜதுரை அவர்கள் | விளையாட்டுப் போட்டிக்கான வெற்றிக் கேடயங்கள் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2002 முதல் செய்யப்பட்ட அபிவிருத்தி திட்டங்கள்

01. குடிநீர், மலசலகூடம்
02. பாடசாலை சின்னம் உருவாக்கியமை
03. பாதுகாப்பு வேலி அமைத்தமை
04. இரண்டு நுழைவாயில் அமைத்தமை
05. விடுதி திருத்தம்
06. மலசலகூட படிக்கட்டு அமைத்தமை
07. விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு
08. சுற்றாடல் ஒழுங்கமைப்பு, பூந்தோட்டம்
09. சிறுவர் பூங்கா அமைத்தல்
10. பாலர் பாடசாலை உருவாக்கியமை
11. யுனிசெப் விசேட செயற்திட்டம்
12. மின்சாரம், வயரினைத்தல்
13. பாடசாலை 9ம் தரம் வரை தரம் உயர்த்தியமை
14. பாடசாலைக்கு பெயர் சூட்டியமை
15. புதிய கட்டிடம் அமைத்தல்
16. ரோனியோ இயந்திரம் பெற்றமை
17. கணினிகள் பெற்றமை
18. கொடிக்கம்பம் அமைத்தல்
19. பாடசாலை கீதம் இயற்றியமை
20. சாளரம் நூல் வெளியீடு

## கல்வி, இணைப்பாடவிதான செயற்திட்டங்கள்

01. சுற்றுலா
02. ஆசிரியர் கௌரவிப்பும், பிரியாவிடையும்
03. தொண்டராசிரியர் நியமனம்
04. போசாக்குணவு அறிமுகம்
05. நூலக அறிமுகம்
06. பத்திரிகை அறிமுகம்
07. பாடசாலை அபிவிருத்தி சங்கம் ஸ்தாபித்தமை
08. பழைய மாணவர் சங்கம் ஸ்தாபித்தமை
09. காரியாலய ஒழுங்கமைப்பு
10. விளையாட்டு போட்டி
11. இலக்கிய மன்றம் உருவாக்கியமை (தமிழ்,ஆங்கிலம்)
12. இந்து மாமன்றம்
13. மாணவ தலைவர் ஒழுங்கு
14. ஒழுக்காற்று குழு
15. காலைக்கூட்டம்
16. ஆங்கிலக்கல்வி அபிவிருத்தி திட்டம்
17. மீள்திறன் குறைந்த மாணவருக்கான விசேட திட்டம்.(எழுத்து, வாசிப்பு, பேச்சு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிஞர் வாக்குகள் சில

01. குழந்தைகளின் உதட்டிலும் இதயத்திலும் இருக்கும் கடவுளின் பெயர் தான் "அம்மா"
02. கடவுள் நமக்கு நாக்கைக் கொடுத்திருப்பது இனிய சொற்களைக் கூறுவதற்கே. (ஒரு மாகான்)
03. வெற்றியாளர்கள் சாதாரண மக்களே, ஆனால் அசாதாரணமான மன உறுதி உள்ளவர்கள். (ஒரு மகான்)
04. பொய்மையை விடமிகப் பெரிய பாவம் வேறொன்றும் இல்லை.(சாணக்கியர்)
05. நான் எதையும் நேசிக்கின்றேன், அதனால் தான் எல்லாவற்றையும் என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. (டால்ஸ்டாய்)
06. எவன் பிறர் நற்செயலைப் பார்த்து மகிழ்ச்சி கொள்ளவில்லையோ, அதனால் நல்ல செயல்கள் எதையும் செய்ய முடியாது (ஜேம்ஸ்ஆலன்)
07. ஒருவன் எதை வேண்டுமானாலும் இழக்கலாம் ஆனால் தன் சுய கௌரவத்தை இழக்கக்கூடாது. (சாக்ரடீஸ்)
08. எத்துணை முயன்றாலும் உபாயம் அறியாது செயல் செய்தால் தோல்வியே. (சாணக்கியர்)
09. பொய் பேசுபவரிடமும், தூற்றித்திரிவோரிடமும் தொடர்பு கொள்ளாதே. (ஸ்ரீ ராமானுஜர்)
10. ஒரு இலட்சியத்தை எடுத்துக் கொண்டு தீவிரமாகப் பாடுபட்டால் அதனை அடைவது உறுதி. (அறிஞர் வாக்கு)

### இளைஞர்களே.................

நாம் ஆசையினால் பல செயல்களில் ஈடுபடுவதால் தீய விளைகளைச் செய்த பாவத்திற்கும், துன்பத்திற்கும் ஆளாகின்றோம். நாம் இவ்வாறு செய்யும் செயல்கள் உலக இன்பத்தை கெடுத்து ஆன்ம நலத்தை கெடுக்கும் தீவினைகள் எனப்படும். இது நம்மை மட்டுமன்றி எம்மை சூழ உள்ள அனைவரையும் பாதிக்கும். இளவயதில் நாம் புரியும் தீய வினைகள் எமது வாழ்க்கையின் இறுதிவரை துன்பத்தையே கொண்டு சேரும்.

ஆசை, கோபம், பொறாமை, வன்சொல் முதலியவை எம்மிடையே வளர்க்காமல் நேர்மை, சத்தியம், அடக்கம், மனஅமைதி என்பவற்றை வளர்த்து நல்வினைகளை செய்ய முற்படல் வேண்டும். ஆணவத்தை அடக்கி ஆன்மாவுக்கு நன்மை பயக்கும் செயல்களைப் புரிதல் வேண்டும். நாம் செய்யும் நல்வினைகள் நல்ல பலனையும் தீய செயல்கள் துன்பத்தையும் தரும். கடவுள் வழிபாடு ஏழைகளுக்கு இரங்கள் போன்ற செயல்கள் நல்வினைகளாகும். இளைஞர்களாகிய நாம் நல்வினை செய்து வருவோமாக.

"சைவ சமயமும் எமக்கு இதையே வலியுருத்துகின்றது.
நன்மையை கடைப்பிடி தீவினையை அகற்று."

திருமதி.S.கணேஷன்(பிரதியதிபர்)
பிரின்சஸ் த.வி
கோணப்பிட்டிய - கந்தப்பளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் தர மாணவர்களும் புலமை பரிசில் பரீட்சையும்

இலங்கையின் கல்வித் திட்டத்தில் தரம் ஐந்து மாணவர்களுக்கான " புலமைப்பரிசில் பரீட்சை விசேடமாக நோக்க கூடிய ஒன்றாக காணப்படு -கின்றது. இலங்கையின் கல்விக் கொள்கை வகுப்பாளர்களால் ஒவ்வொரு தரத்திற்கும் தனியான பாடத்திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ள போதிலும் புலமைப்பரிசில் பரீட்சை மாத்திரம் ஐந்தாம் தர பாடத்திட்டத்திற்கு அப்பாற்பட்டு காணப்படுகின்றது. இதனால் மாணவர்களும், ஆசிரியர்களும், பெற்றோர்களும் பல்வேறு இன்னல்களுக்கு உட்படுகின்றனர்.

தரம் ஐந்தில் கற்கும் மாணவர்கள் பெரும்பாலும் பத்து வயதுக்கும், பதினொறு வயதுக்கும் இடைப்பட்டவர்களாகவே காணப்படுகின்றனர். அவர்களால் அவர்களின் நுண்ணறிவிற்கும், கிரகித்தல் திறனுக்கும் ஏற்ற அளவே கல்வியில் அவர்களின் திறமையை காட்ட முடியும். இத்திறமை -யானது கிராமப்புற மாணவர்களுக்கும் நகர்புற மாணவர்களுக்கும் இடையில் பாரிய வித்தியாசத்தை ஏற்படுத்துகின்றது. நகர்புற மாணவர்கள் மின்னஞ்சல், இணையம், கனணி, சஞ்சிகைகள்,பத்திரிகைகள், பல்வேறு நூலாசிரியர்களின் நூல்களின் போன்றவற்றோடு,பல ஆசிரியர்களின் பிரத்தியேக வகுப்புக்களிலும் கற்று தேர்ந்து இப்பரீட்சையில் சிறந்த முறையில் சித்தியடைகின்றனர். அதற்கு எதிர்மாறாக பின்தங்கிய கிராமப்புற மாணவர்கள் பல குறைபாடு -களோடு இயங்கும் பாடசாலைகளிலிருந்து தோற்றி அதே அளவு புள்ளிக -ளோடு சித்தியடைய வேண்டும் என எதிர்பார்ப்பது எவ்விதத்தில் நியாயமாகும்.

அத்தோடு நகர்ப்புற மாணவர்களின் பெற்றோர்கள் அவர்களின் பிள்ளைகளுக்கு வழங்கும் ஆக்கமும், ஊக்கமும் அவர்கள் இப்பரீட்சையில் இலகுவாக சித்தியடைய வழிகோலுகிறது. வசதிகளற்ற கிராமப்புற, தோட்டப்புற, மாணவர்களின் பெற்றோர்கள் காலை முதல், மாலை வரை வெயிலிலும். மழையிலும் கஷ்டப்பட்டு உழைத்து விட்டு வீடு திரும்புகின்ற -தனால் அவர்களால் தனது பிள்ளைகளுக்கு எவ்வகையில் ஊக்கத்தினை வழங்க முடியும். அடிப்படை வசதிகள் எதுவும் அற்ற வீடுகளில் வசிக்கும் இவர்களால் தனது பிள்ளைக்கு தனியாக இருந்து கற்க ஓர் இடத்தை கூட ஒதுக்கி தரமுடியாத நிலையே காணப்படுகின்றது.
பல்வேறு வேலைப்பலுவிற்கு மத்தியில் பாடசாலையில் தனது கற்பித்தலை மேற்கொள்ளும் ஆசிரியர்களும் கூட தரம் ஐந்து மாணவர்களுக்கு கற்பிப்பதற்காக பல்வேறு விடையங்களை தேடி அறிய வேண்டியதாக உள்ளது. இது ஒரு நல்ல விடையம் என்ற போதிலும் மாணவர்களின் இயலுமைக்கு அப்பால் அவர்களுக்கு அரியாத பல விடயங்களை வலுக் கட்டாயமாகத் திணிக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது ஆசிரியர்களுக்கு கற்பித்தல் சலிப்பையே ஏற்படுத்துகின்றது. அத்தோடு இப்பரீட்சை தொடர்பாக எவ்வித அறிவும் அற்ற பெற்றோரும் கூட. இப்பரீட்சையில் தன் பிள்ளையும் சித்தியடைய வேண்டும் என்ற ஆவலில் தன் பிள்ளைக்கு பல்வேறு வடிவிலான சுமைகளையே அவர்களின் மீதுசுமத்து -கின்றனர். இதில் பிள்ளை பல்வேறு மன உளைச்சலுக்கு ஆளாவதோடு மனநிலை பாதிக்கப்படக் கூடிய சூழ்நிலைக்கூட உருவாகின்றது. இதற்கு மறுபுறம் பின் தங்கிய பிரதேசத்தில் உள்ள பிள்ளைகளின் பெற்றோர்கள் கல்வி அறிவு அற்ற பாமரர்களாகவே உள்ளனர் தரம் 1-5 வரையில் ஒன்றாக கற்ற சக மாணவர்களில் சிலர் இப்பரீட்சையில் சித்தியடைந்து பிரபல்யமான பாடசாலைக்கு (நகர்புற) சென்று தனது கல்வியை தொடர தான் மட்டும் இவ்வாறே இருக்கின்றேன் என்ற எண்ணமும், ஏக்கமும் சித்தியடையாத பிள்ளைக்கு உருவாகின்றது. இது அவனுக்கு கல்வியில் ஒரு பின்னடைவை ஏற்படுத்துகின்றது.

அதோடு பின் தங்கிய பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்கள் எவ்வளவு தான் முயன்றாலும், பெற்றோர்கள் அப்பிள்ளைக்கு ஊக்கமும் வழங்காததால் ஆசிரியரின் முயற்சி தோல்வியிலேயே முடிகின்றது. இவ்வாறே தரம் 11இல் கல்வி கற்கும் சகல மாணவ்களுக்கும் க.பொ.த (சா/த) பரீட்சைக்குத் தோற்றலாம். தரம் 13 இல் கல்வி கற்கும் சகல மாணவர்களும் க.பொ.த (உ/த) பரீட்சைக்குத் தோற்றலாம். ஆனால் தரம் 5 இல் மட்டும் இப்பரீட்சைக்கு (புலமைப்பரிசில்) தோற்றும் போது வயது எல்லை உள்ளது. ஒரே வகுப்பில் கற்கும் மாணவர்கள் பத்து வயதுக்கு கூடாமல் இருப்பது அவசியம். இவ்வயது கட்டுப்பாடு இருப்பதால், தன்னால் இப்பரீட்சைக்கு தோற்ற முடியவில்லையே என்ற ஏக்கம் இப்பரீட்சைக்கு தோற்ற முடியாத வயது கூடிய பிள்ளையிடம் ஏற்படுகின்றது. அதோடு இப்பரீட்சைக்கு தோற்ற முடியாத காரணம் அவர்களின் மனதில் ஒருவித தாக்கத்தை ஏற்படுத்தும் சாத்தியத்தை உருவாக்குகின்றது. இது அவர்களின் கல்வியிலும் பின்னடைவை ஏற்படுத்தகின்றது.

ஆக மொத்தத்தில் தரம் ஐந்தில் நடாத்தப்படும் இப்பரீட்சையானது மாணவர் மத்தியில் கல்வியின் பால் விரக்தியையும், மன அழுத்தங்களையும் ஏற்படுத்துகின்றது எனலாம். சகல மாணவர்களையும் கல்வியின் பால் சமன் என்ற நிலையில் இருந்து விலக்கியே வைக்கின்றது. ஆகவே தரம் ஐந்தில் கல்வி கற்கும் சகல மாணவர்களையும் இப்பரீட்சை எழுத அனுமதிக்க வேண்டும் என்பதே எனது அபிப்பிராயம்.

பல்வேறு வளக்குறைபாடுகளுடன் இயங்கும் பின் தங்கிய பாடசா -லைகளில் இருந்து இப்பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களிடமும், நகர்புற மாணவர்கள் இப்பரீட்சையில் காட்டும் அதேயளவு அடைவுமட்டத்தை எதிர்பார்ப்பது எவ்வகையிலும் பொருத்தமில்லாத விடையமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனெனில் இலங்கையின் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் ஆசிரியர் பற்றாக்குறை தலைவிரித்தாடிய மாவட்டமாக நுவரெலியா மாவட்டம் கருதப்படுகின்றது.அண்மையில் வழங்கப்பட்ட 3179 ஆசிரிய நியமனங்களில் அதிகமானோர் நுவரெலியா மாவட்ட பாடசாலைகளுக்கே நியமிக்கப்பட்டனர். ஆகவே ஆசிரிய பற்றாக் குறையோடு இவ்வளவு நாளும் இயங்கி வந்த இப் பாடசாலைகளில் இருந்து கடந்த காலங்களில் இப்பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களிடமிருந்து இழிவு மட்ட புள்ளி "135" எதிர்பார்க்கப்பட்டிருக்கிறது. இம்மாவட்டத்துடன் ஒப்பிடுகையில் யுத்த சூழ்நிலைகள் காணப்பட்டாலும் கூட ஆசிரியர் வளம், அதிகமாகவும் படிப்பதற்கான நூல்கள் அதிகமாகவும், பிரத்தியேக வகுப்புக்கள் அதிகமாக கொண்டிருக்கும் மாவட்டங்களான யாழ்ப்பாணம், திருகோணமலை, போன்ற மாவட்டங்களுக்கு கடந்த வருடம் முறையே "133", "125" புள்ளிகளே இழிவு புள்ளிகளாக நிர்ணயிக்கப்பட்டது.

ஏனைய பாடசாலைகளுடன் ஒப்பிடுகையில் பல்வேறு வசதிகளை தன்ன -கத்தே கொண்ட கண்டி, பதுளை போன்ற மாவட்டங்களுக்கு கூட முறையே "138", "132" புள்ளிகளே கடந்த வருடம் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. இது எவ்விதத்தில் பின் தங்கிய பாடசாலை மாணவர்களுக்கு பொருந்தும் என்பது ஆழ்ந்து நோக்க வேண்டிய ஒரு விடயம் ஆகும். எனவே பரீட்சைத் திணைக் களமானது மாவட்ட "இழிவு புள்ளி" என்ற நிலையில் இருந்து விடுபட்டுவலய மட்ட இழிவு புள்ளி கஸ்ட பிரதேச பாடசாலைகளுக்கான விசேட இழிவு புள்ளியை நிர்ணயிக்க வேண்டும் என எதிர்பாக்கப்படுகிறது. அதோடு பின் தங்கிய பாடசாலை மாணவர்களின் பெற்றோரின் கல்வியறிவு மிகவும் தாழ்ந்த நிலையிலே உள்ளனர். இவர்களால் தனது பிள்ளைகளுக்கு எவ்வாறான கல்வி விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும். சமூக விழிப்புணர்வு அற்ற இவர்களால் தமது வருமானத்தில் கல்விக்கென குறிப்பிட்டளவு பணத்தை செலவிடும் பழக்கம் கூட இல்லாதவர்களாகவே உள்ளனர்.

அதோடு வெளியிடங்களுக்கு சென்று வரமுடியாத நிலையில் காணப்படும் போக்குவரத்து வசதி கூட இப்பிள்ளைகளின் கல்வியில் அதிக செல்வாக்கு செலுத்துகின்றன. இதனையும் கல்வியலாளர்களின் கவனத்திற் கொண்டு செயற்பட வேண்டும் என்பது எனது அபிப்பிராயமாகும்.

ஆகவே இவற்றினை கருத்திற் கொண்டு "கல்வியளாளர்கள்" இப் பரீட்சையின் யதார்த்தை உணர்ந்து சிறந்த தீர்வு ஒன்றினை முன்வைக்க வேண்டும் என பல்வேறு தரப்பினர்களாலும் கருத்துக்கள் முன்வைக்கப்படு -கின்றது. இதனை கவனத்தில் எடுத்து செயற்பட்டால் எதிர்காலத்தில் வளமான சுபீட்சமான நாட்டுக்கான நற்பிரஜைகளை உருவாக்கலாம், என்பது திண்ணம்

ஆக்கம்

**அ.இராஜேந்திரன் (ஆசிரியர்)**
பிரின்சஸ் த.வி.
கோணப்பிட்டிய - கந்தப்பளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்களும் கல்வித் துறையும்

மலையகப் பெண்கள் தனக் கென்று ஒரு வட்டத்தை அமைத்துக் கொண்டு அதற்கேற்ப அவர்களின் வாழ்க்கைச் சூழலை அமைத்துக் கொண்டார்கள். ஆனால் கடந்த இரு நூற்றாண்டு காலமாக அவர்கள் தனக்குள் இட்டுக் கொண்ட குறுகிய வட்டத்தை உடைத்துக்கொண்டு வெளியேறி முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆண்டவன் படைப்பில் ஆண்,பெண் என்னும் இருபாலாரும் சமமே. இதில் ஆண்கள் உயர்ந்தவர்களென்றும் பெண்களைத் தாழ்ந்தவர்களென்றும் கூற முடியாது. முற்காலத்தில் பெண்களுக்குச் சமவுரிமை இருந்தது. ஔவையார், காக்கைப்பாடினியார் போன்ற புலவர்களைக் கூறலாம். இடைக்காலத்தில் வேதவிதிகளும், மதக்கொள்கைகளும் புகுந்ததன் பின் பெண்கள் அடிமை -களாக நடத்தப்பட்டனர். வீட்டை விட்டு பெண்கள் வெளியிலே வரக்கூடாது "பெண் புத்தி பின் புத்தி" என்று இழிவுபடுத்தப்பட்டது. பெண்கள் பழைய தடைகளை உடைத்தெரிந்து விட்டு வெளியேற வேண்டும் என்றும் பெண்விடு -தலைக்காகவும் குரல் கொடுத்தவர் பாரதி.

"எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை காண்" என்று கும்மியடித்துப் பாடினார் பாரதி. பெண்ணடிமை தீருமட்டும் பேசுந்திருநாட்டு மண்ணடிமை தீருவது முயற்கொம்பே" என்று முழங்கினார் புரட்சி கவிபாரதி தாசன்.

அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு; ஏட்டையும் பெண்கள் தொடலாமா? என்ற கொடுமையான கொள்கைகள் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் நிலவியது. விதவைக் கொடுமை, உடன்கட்டை ஏறுதல், பாலியல் விவாகம், வரதட்சனைக்கொடுமை முதலியவற்றால் பெண்ணுரிமைக் குரல் தீவிரமுனைப் பூட்டப்பட்டது. பெண்கள் சமூகம், அரசியல், பொருளாதாரம் போன்ற சகல துறைகளிலும் முன்னேறினர்.

தற்போது கல்வித்துறையை எடுத்துக்கொள்ளும் போது உயர்தரத்தில் சித்தி -யெய்தி மேற்படிப்புகளை தொடங்குவதில் அதிகமானோர் பெண்களாகவே காணப்படுகின்றனர். கல்வியற் கல்லூரிகளிலும் அவ்வாறே பெண்கள் தான் இன்று அதிகரித்துக் காணப்படுகின்றனர் இதற்கு காரணம் பெண்களின் கல்வி கற்கும் நிலை முன்னேறிச் செல்வதினாலேயாகும். எனவே பெண்கள் ஆண் -களுக்குச் சளைத்தவர்கள் இல்லை என்ற தோரணையில் பட்டங்கள் ஆள்வதும், சட்டங்கள் செய்யவும் செய்கிறார்கள். இலங்கைப் பழ்கலைக் கழகங்களில் பேராசிரியர்களாகவும், விரிவுரையாளர்களாகவும், பல துறைக -ளில் பெண்கள் பிரகாசிக்கிறார்கள். இந்நாட்டின் ஜனாதிபதி, பிரதமர்,உயர் நீதிமன்ற நீதிபதி ஆகிய முக்கிய அரசியற் பதவிகளை பெண்கள் வகித் துள்ளார்கள். இன்றைய காலகட்டத்தில் ஆண்கள் உத்தியோகம் பார்க்கும் பெண்களையே விரும்புகின்றனர். இன்றைய பொருளாதார யுகத்தில் இதன் அவசியம் உணரப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றும் வரதட்சனை எனும் சீதனம்விரும்பப்படும் ஒன்றாகவும் விளங்குகின்றது. எனவே இதனை உடைத்தெறிய பெண்களும் உத்தியோகம் பார்ப்பது கட்டாயமானது. இன்று பெண்கள் இல்லாத துறைகள் இல்லை முப் படைகளிலும் உள்ளனர். தொட்டிலை மட்டும் ஆட்டிக்கொண்டிருந்த கைகள் இன்று தொல்லுவகை ஆட்சி செய்யும் அதிகாரம் படைத்த கையாகவும் மாறி விட்டது.குடும்பப் பொறுப்பைக் கவனிப்பிலும் அவர்கள் பின் வாங்கவில்லை. அவர்கள் கற்ற கல்வி குடும்பத்தை சீராக்கவும், சிக்கனமாக வாழ்வதற்கும் எதிர்காலத் தலை முறையை நல்ல முறையில் உருவாக்கவும் பயன்படும். என்பதில் ஐயம் இல்லை.

**ந.புனிதவதி** ஆசிரியை
பிரின்சஸ் த.வி
கோணப்பிட்டிய, கந்தப்பளை.

## மனிதனின் ஒற்றுமை

மனிதன் எதை எதையோ கற்றுக் கொண்டிருக்கிறான். ஆனால் சேர்ந்து வாழக் கற்றுக் கொள்ளவில்லை. மனிதனால் மிக அற்பமானது என்று கருதப்படுகின்ற தேங்காய் நார் தூசியானது சேர்ந்து வாழக்கற்றுக் கொண்டு, பல தூசிகள் சேர்ந்து இழைகளாகி, மூன்று இழைகள் சேர்ந்து சிறு கயிராகி, அது மூன்றும் சேர்ந்து பந்தல் கயிராகி, அதுமூன்றும் சேர்ந்து, நீர் இறைக்கும் வால் கயிராகி, அது மூன்றும் சேர்ந்து தேர் வடக் கயிராகி, தானே தேங்காய் உடைக்கும் அளவுக்கு வெற்றி பெற்றிருக்கின்றது. மிக அற்பமான இத்தூசி -யினிடத்திலிருந்து சேர்ந்து வாழும் அறிவை மனிதன் பெறுவான்? பெற்றால் அவன் வாழ்வு சிறக்காதா?


**திரு.S. பிரங்ளின்**
(முன்னாள் அதிபர்)

## மனிதா

விழித்தெழு மனிதா
வீண் வார்த்தைகள் பேசிடாதே மனிதா
வினாக்கள் தொடுத்திடு மனிதா
விடைகள் தேடிடு மனிதா
விண்ணை நோக்கி சென்றிடு மனிதா
புதுயுகம் படைத்திடு மனிதா
புதுமைகள் செய்திடு மனிதா
கற்பாறை சிதைந்து மண் உருவாகுவது போல்
மனிதன் மண்ணில் மறையும் முன்
மனிதனாகிவிடு மனிதா

**வி.கோபிநாத் (ஆசிரியர்)**
பிரின்சஸ் த.வி.
கோணப்பிட்டிய - கந்தப்பளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழ் இலக்கிய மன்ற உறுப்பினர்களுடன்
அதிபர் மற்றும் ஆசிரியர்கள்



ஆங்கில இலக்கிய மன்ற உறுப்பினர்களுடன்
அதிபர் மற்றும் ஆசிரியர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நூலாக்கக்குழு



மாணவர் தலைவர்களுடன் அதிபர்.ஆசிரியர்கள்



2006 தமிழ் தின போட்டியில் வெற்றியீட்டியோர் அதிபர்.ஆசிரியர்களுடன்



விளையாட்டுப் போட்டி



பழைய கட்டிடம்



தற்காலிக வகுப்பறை



கணினி வழங்கும் வைபவம்



கலை நிகழ்ச்சி


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



தரம் 01 மாணவர்களுடன் ஆசிரியர், அதிபர்



தரம் 02 மாணவர்களுடன் ஆசிரியர், அதிபர்



தரம் 03 மாணவர்களுடன் ஆசிரியர், அதிபர்



தரம் 04 மாணவர்களுடன் ஆசிரியர், அதிபர்



தரம் 05 மாணவர்களுடன் ஆசிரியர், அதிபர்



தரம் 06 மாணவர்களுடன் ஆசிரியர், அதிபர்



தரம் 07 மாணவர்களுடன் ஆசிரியர், அதிபர்



தரம் 08 மாணவர்களுடன் ஆசிரியர், அதிபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் துஷ்பிரயோகம்

தாயின் கருவறையில் 10 மாதம் தான் சுமந்து இத்தரணியில் எட்டிப் பார்த்த பிள்ளைப் பருவம் சிறுவர்களாக உருவெடுத்து இன்று துஷ்பிர -யோகத்திற்கு உட்பட்டு வீதிகளில் ஒதுங்கி கிடக்கின்றனர்.

இனி இவர்களின் உரிமை என்ன?. இவர்கள் எவ்வாறு துஷ்பிரயோகத் -திற்கு உட்படுகிறார்கள் என பார்ப்பதற்கு முன்பு முதலில் 1924ம் ஆண்டு ஜெனிவா சிறுவர் உரிமைப் பிரகடனம் உருவாக்கப்பட்டது. ஆனால் அது நடைமுறைப்படுத்தவில்லை. அதன் பின் 1948ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பொதுச் சபை அனைத்துலக சிறுவர் உரிமை பிரகடனப்படுத்தப்பட்டது. அதுவும் சாத்தியமற்றுப் போனது இதன் பின்னர் 1954ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பொதுச்சபையினால் சிறுவர் உரிமைப்பிரகடனம் உருவாக்கப்பட்டது. இதன் பின்னர் சிறுவர்கள் வழிநடத்தப்பட வேண்டிய நெறிமுறைக் கொள்கை வெளியிட்டது.

1979ம் ஆண்டு மேலும் சிறுவர் உரிமை சரிவர பாதுகாப்பு பெற வேண்டும் என்பதற்காக 1989ம் ஆண்டு கார்த்திகை மாதம் 20ம் திகதி ஐக்கிய நாடுகள் பொதுச்சபையினால் வெளியிடப்பட்ட சாசனங்கள் ஒன்று சிறுவர் உரிமை சாசனமாகும். இது 1990 இல் நடைமுறைக்கு வந்தது. சிறுவர் உரிமை பாதுகாப்பிற்கு இலங்கை அரசாங்கம் சில சட்டங்களை ஏற்படுத்தியுள்ளது.

01. குற்றவியல் கோவை (1995ம் ஆண்டு 22ம் இலக்கச்சட்டம் 1998ம் ஆண்டு 29ம் இலக்கச்சட்டம்)
02. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை
03. பராமரிப்புச் சட்டம்
04. சிறுவர் மகவேற்புக் கட்டளைச் சட்டம்
05. ஆபாச வெளியீடுகள் கட்டளைச் சட்டம்
06. வேலையாட்கள் விசேட படிகள் சட்டம்.
07. சிறுவர் இளம் பராயத்தர் சட்டம்
08. சிறுவர் இளம் பராயத்தவர் கட்டளைச் சட்டம்
09. தொழிற்சாலை கட்டளைச்சட்டம்.
10. சிறுவர், பெண்கள் இளம்பராயத்தவர் கட்டளைச் சட்டம்

மேலும் இவர்களின் உரிமைகளை பாதுகாக்க மேலும் வலுவுற்ற (1998ம் ஆண்டு 50ம் இலக்கச் சட்டத்தின் மூலம் தேசிய பாதுகாப்பு அதிகார சபை உருவாக்கப்பட்டது. இச்சட்ட திட்டங்களின் படி நாட்டில் 18 வயதுக்கு குறைந்த ஒவ்வோரு மனிதனும் சிறுவர்களாக கருதப்படுவார்கள். எனவே இவ்வயதுக்கு உட்பட்ட சிறுவர்களை வளர்ந்தோர்களாகிய நாங்கள் எம் சிறுவர்கள், சிறுமியர்கள் பாதுகாப்பிற்காகவும் மேம்மாட்டுக்காகவும் உழைக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சிறுவர் துஷ்பிரயோகம் என்பது

துஷ்பிரயோகம் என்பது சிறுவர்களின் ஆரோக்கியம் வளர்ச்சி என்பவற்றை சேதப்படுத்துவதும் அல்லது சேதப்படுத்துவதற்கு இடமளிக்கும் யாதேனு மொன்றைச் செய்வது அல்லது சிறுவர்களின் ஆரோக்கியம் வளர்ச்சி என்பவற்றிற்கு தேவையான ஒன்றை செய்யாமலிருப்பது ஆகும். இது சிறுவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படுகின்ற நடத்தையாகவே அன்றேல் செயலாகவே அமைகின்றது.

### சிறுவர் துஷ்பிரயோகத்தின் வகைகள்

01. சிறுவர்களை வேலைக்கமர்த்துதல்
02. பிள்ளையின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்காமை
03. அவசியமின்றி அதட்டுதல்/ அடித்தல்
04. உடல் ரீதியாக காயப்படுத்தல்
05. பிள்ளையின் அடிப்படைத் தேவைகளை உரிய முறையில் வழங்காது விடல்
06. குற்றச் செயல்களில் ஈடுபடுத்தல்
07. பிள்ளையின் நம்பிக்கையை இழக்கச் செய்தல்.
08. பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்துதல்
09. சரீர தண்டணை வழங்குதல்.
10. தொழிலில் ஈடுபடுத்தல்/ தொழில் செய்வோர் சுரண்டுதல்.
11. பெற்றோரால் கைவிடுதல்
12. பெற்றோரால் கவனியாது விடல்
13. உடல்/ உள ரீதியாக பிள்ளையை புண்படுத்துதல்
14. போதையூட்டுதல், நஞ்சியூட்டுதல்
15. பிழையான சிகிச்சை வழங்குதல் / நோய் நிலைமைப்பற்றி பொய்யான செய்தி வழங்குதல் / வைத்தியரிடம் சிகிச்சை பெற்றுக் கொடுக்காமை.
16. சிறுவர்களை விற்றலும், அவர்களை வியாபார நோக்குக்காகவும் பயன்படுத்துதல்
17. போர் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தல்
18. போதையில் சிறுவர்களை தாக்குதல்

### சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் என்பது

ஒரு பிள்ளையை அதைவிட அதிக பலம் வாய்ந்த, வயதில் கூடிய அதிக வலிமையுற்ற ஒரு நபர் பாலியல் நடவடிக்கைகளைப் பலவந்தப் படுத்துதல், தூண்டுதல், கட்டாயப்படுத்தல் அல்லது பாலியல் செயலில் ஈடுபடுத்தல் சிறுவர் துஷ்பிரயோகம் எனப்படுகின்றது. பாலியல் நடவடிக்கைக்காக ஒருபிள்ளையினை விருப்பத்துடன் ஈடுபட்டாலும் அது துஷ்பிரயோகமாகவேகருதப்படும். ஏனெனில் பிள்ளை உடல் ரீதியாக சம்மதமளிக்க முடியாத பிள்ளையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாலியல் துஷ்பிரயோகத்தின் வகைகள்

01. ஒருவரின் பாலியல் உணர்வுகளை தூண்டக்கூடிய வகையால் அவரின் உடல் உறுப்புக்களை சிறுவருக்கு காட்டல்.
02. சிறுவரின்/ சிறுமியின் உடல் உறுப்புக்களைக் காட்டச் செய்தல்.
03. பாலியல் சம்பந்தமான விளக்கப் படங்கள், தொலைபேசி உரையாடல்கள், கனணி, ஊடகங்கள் மூலம் பாலியல் உணர்வை தூண்டச் செய்தல்
04. காமக்களிப்புட்டும் படங்களுக்குச் சிறுவர்களை உபயோகித்தல். (வீடியோ படங்கள், புகைப்படங்கள்)
05. வயது வந்த ஒருவர் பாலியல் நோக்கோடு ஒரு பிள்ளையை தொடுதல்.
06. வயது வந்த ஒருவர் தன்னுடைய உறுப்புக்களை ஒரு பிள்ளையை கொண்டு கிளிர்ச்சியூட்டக் கூறுதல்.
07. வயது வந்த ஒருவர் தமது உடம்பையோ, வேறு கருவிகளையோ கொண்டு ஒரு சிறு பிள்ளையின் உறுப்புக்களை கிளிர்ச்சியூட்டுதல்.
08. சிறுவர்/ சிறுமிகளை வல்லுறவு கொள்ள முயற்சித்தல்.

## துஷ்பிரயோகம் செய்பவர் யார்

01. பிள்ளைகளை நன்கு தெரிந்தவர்.
02. பிள்ளையால் நம்பப்படுகிறவர்.
03. குடும்ப நண்பர்
04. அயலவர்கள்
05. உறவினர்கள்.
06. குடும்ப உறுப்பினர்

## இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோகம் இடம்பெறுவதற்கான காரணங்கள்

### 01.சமூகக் காரணங்கள்

கூட்டுக் குடும்பங்கள், தனிக் குடும்பங்களாக காணப்படுகின்றன. பிள்ளை மீது அதிக கவனம் செலுத்தப்படாது அலட்சியப் படுத்துவதால் துஷ்பிர -யோகத்திற்கு இடமளிக்கின்றது. தாய் தந்தை இருவரும் தொழிலும் ஈடுபடுவதாலும் தொழிலை நாம் வேறு ஊருக்கோ அல்லது நாட்டுக்கோ செல்லுகின்ற படியாலும் பாலியல் துஷ்பிரயோகத்திற்கான வாய்ப்பு ஏற்படுகின்றன.

### 02.பொருளாதாரக் காரணங்கள்

இலங்கையில் தாராள சந்தை பொருளாதாரமும் சுற்றுலாத்துறையும் அபிவிருத்தியடைய தொடங்கியதையடுத்து சிறுவர் பாலில் வர்த்தகம் வளர்ச்சியடைய தொடங்கியதாக நம்பப்படுகிறது. இதன் மூலமும் சிறுவர்கள் இந்த பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகின்றனர்.

### 03.கலாச்சாரக் காரணங்கள்

பெற்றோர்கள் தனது பிள்ளைகளிடம் குறைந்தளவு கவனம் செலுத்து வதனால் இந்த துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகின்றார்கள். மேலும் வர்த்தக ரீதியில் பாலியல் நடவடிக்கையில் கூடுதலாக ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன. பாலியல் பற்றிய சரியான தகவல்களை அறிந்து கொள்ள முடியாமையால் இலகுவில் இவர்கள் பாதிப்புக்குள்ளாகி விடுகிகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**04.சுகாதாரக் காரணங்கள்**

எயிட்ஸ் நோய், சிறுவருக்கு பாலியல் நடவடிக்கைகளில் ஈடுபடும் போது ஏற்படாது என சிலர் தவறாக நம்புவதாலும் சிறுவர்களுக்கு பாலியல் நடவடிக்கைகளில் இருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ள தெரியாத காரணத்தினால் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப் படுகிறார்கள்.

**துஷ்பிரயோகம் காரணமாக சிறுவர்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்கள்**

இது வயதுக்கு வயது வேறுபடலாம். 8 வயதுக்கு குறைந்த, 08முதல் 12 வயதுக்கிடையே இந்த துஷ்பிரயோகங்கள் தன்மைக்கேற்ப அவர்களின் பாதிப்புக்கள் மாற்றமடையும். இவை உடல் சார்ந்ததாக உளம் சார்ந்ததாக இருக்கலாம். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இவ்வாறான பண்புகள் ஒன்றுக்கு மேற்பட்டவையாக அமைந்து பிள்ளையின் நடத்தை கோலத்தில் பின்வரும் மாற்றங்கள் ஏற்படுத்தப்படுகின்றன.

* பயத்துடனும் அமைதியின்றியும் காலத்தை கழித்தல்
* பிறர் பற்றி விசுவாசம் கொள்ளாமை அல்லது நம்பிக்கை குறைதல்
* குடும்ப அங்கத்தவர்களிடம் இருந்தும், வளர்ந்தவர்களிடம் இருந்தும் விட்டு விலகி தனியே இருத்தல்
* தம்மைப்பற்றி குறைவாக மதிப்பிடல்
* முரட்டுத்தனமான நடத்தை
* சந்தோசம் குறைவடைவதால்/ சந்தோசம் இல்லாமை
* விரைவாக கோபம் ஏற்படல்/ வன்செயலில் ஈடுபடுதல்
* பொய் சொல்லுதல்/ திருடுதல்.
* வீட்டை விட்டு வெளியேறிச் செல்லுதலும்/ உயிரைப் போக்கிக் கொள்ள முயற்சி எடுத்தலும்
* பயம், அமைதியின்மை காரணமாக உடலில் குறைபாடுகள் ஏற்படல்.
* அடிக்கடி உடல் வலி அல்லது வேதனைப் பற்றி குறிப்பிடல்.
* மந்தமான வளர்ச்சி
* கர்ப்பவதியாக மாறுதல்.
* கற்க முடியாமை/ கற்றல் செயற்பாடுகள் இடைநடுவே முறிவடைதல்
* புகைபிடித்தல்/ மதுபானம் அருந்துதல்.
* கல்வியில் அதிக அக்கறை காட்டாமை / ஒதுங்கி இருத்தல்.
* விரக்தி
* ஆர்வம் குறைதல்.
* சுயமதிப்பு குறைதல்.
* பாதுகாப்பு குறைதல்.
* ஒழுங்கற்ற நடத்தை (மீண்டும் துஷ்பிரயோகத்தில் ஈடுபடல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொதுவாக உடல் ரீதியாக துஷ்பிரயோகங்களின் அடையாளங்களும், குணங்குறிகளும்**

01. தன்னைப் பற்றி குறைவான எண்ணங்கள்.
02. பாலியல் ரீதியான வெளிப்படையான செயற்பாடு.
03. பிறரை அன்பு செய்யவோ, நம்பவோ முடியாமை.
04. மூர்க்கத்தன்மை, பலாத்கார, பிரயோகம், சிலவேளைகளில் சட்ட ஒழுங்கின்மை
05. கடுங் கோபம் ஆத்திரம் கொள்ளுதல்.
06. தனக்கே தீங்கிழைக்கும் நடத்தை.
07. தற்கொலைக்கு ஒப்பான செயல்.
08. சாதுவான பின்வாங்கும் தன்மை
09. புதிய செயற்பாடுகள் பற்றிய அச்சம்.
10. மனக்கவலை, அச்ச உணர்வு.
11. கவலை, தாழ்வு மனப்பான்மை பற்றிய சிந்தனை.
12. போதைப்பொருள் கலந்த பண்டங்கள் மீது ஆசை
13. உடல் இயக்கத்தால் கஸ்டம்/ நோவு.
14. விளையாட்டுக்களில் பங்கு கொள்ள பின்னிற்றல், கள்ளத்தனம் பண்ணுதல்
15. ஒழிந்து மறைதல்.

**பாலியல் துஷ்பிரயோக அடையாளங்களும் குணங்குறிகளும்**

01. உள்ளாடையில் அடையாளங்கள் காணப்படும்.
02. நடத்தையில் எதிர்பாராத மாற்றம் காணுதல்.
03. அமைதியான சுபாவமுள்ள பிள்ளை சத்தமிட்டு பேசுதல்.
04. நடத்தை பிறழ்வான எரிச்சலுடன் கூடிய செயற்பாடுகள்.
05. தூர விலகியிருத்தல்.
06. வயது வந்தோரில் நம்பிக்கை கொள்ளாதிருத்தல்.
07. பால்ரீதியான வெளிப்படையான நடத்தை, வயதுக்கு ஒவ்வாத பேச்சு
08. வயிற்று வலி.
09. படுக்கையை ஈரமாக்குதல்.

## துஷ்பிரயோகத்தில் இருந்து சிறுவர்களை பாதுகாத்தல்.

### குடும்பத்தில் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள்.

* பிள்ளைக்கு பாலியல் பற்றிய அறிவை தெளிவுபடுத்தல்.
* உங்கள் பிள்ளை எந்த நேரத்திலும், எதைப்பற்றியும் உங்களோடு பேசக் கூடிய அன்பான சூழலை ஏற்படுத்துதல்.
* பிள்ளைகள் கூறுவதை முதல் கேளுங்கள் பிள்ளைபால் அதிகம் கவனம் செலுத்துங்கள்.
* மனக்கவலையில் இருந்து விடுபட ஆலோசனை வழங்கவும்.
* பிள்ளையின் உடலைப்பற்றியும் அதன் வித்தியாசம் பற்றியும் உடலை பேண வேண்டிய முறைகளில் அதிக அக்கறை எடுத்தல்.
* பிற நபர்கள் தொடுதல் பிழையான தொடுதல் பற்றி அவர்களுக்கு உதவுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* வயது வந்தவர்கள் உங்கள் பிள்ளையை தொடக்கூடாத விதத்தில் தொட்டதும் செய்யக்கூடாத எதைச்செய்தாலும் மறுப்பதற்கு அல்லது வேண்டாம், என்று கூறுவதற்கு உரிமை உண்டு என்பதை அவர்களுக்கு கூறுதல்.

**02.பாடசாலையில் எடுக்க வேண்டிய நடவடிக்கை**

* மாணவர்களிடம் குடும்ப உறவு பற்றி தெளிவுபடுத்தல்
* பெற்றோர்களின் மற்றும் உறவினர்களின் முக்கியத்துவங்களை மாணவருக்கு உயர்த்துதல்.
* குடும்பங்களுடன் அடிக்கடி சந்திப்புக்களை மேற்கொள்ளல்.
* நல்ல குடும்பங்களின் பங்களிப்பு செயற்பாடுகள் தொடர்பான விளக்கங்களை பெற்றோருக்கு வழங்குதல்.
* பாதிப்புக்குள்ளான மாணவரின் குடும்ப பிண்ணனியை ஆராய்ந்து பொருத்தமான உதவிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.
* பெற்றோர்கள் பூர்த்தி செய்ய வேண்டிய பிள்ளையின் தேவைகளை எடுத்துக் கூறுதல்.
* மாணவருக்கு பாலியல் தொடர்பான தெளிவைப் பெற்றுக் கொடுத்தல்.
* பாலியல் துஷ்பிரயோகம் பற்றி மாணவர்களுக்கு சிறுவயதில் கற்பித்தல்.
* பாலியல் துஷ்பிரயோகங்களை தடுக்க வேண்டிய முக்கிய இடத்தினை சமூகம் பெற வேண்டும்.
* அதில் பெற்றோர்கள் குடும்ப அங்கத்தவர்கள், வர்த்தகர்கள், ஆசிரியர்கள் உட்பட அனைத்து சமூக அமைப்புக்கள், அரச அமைப்புக்கள் அரச சார்பற்ற அமைப்புக்கள் இந்த துஷ்பிரயோகத்தில் இருந்து சிறுவர்களை பாதுகாப்பது எல்லோரதும் கடமையாகும்.

**துஷ்பிரயோகம் தொடர்பாக அணுகவேண்டிய நிறுவனங்கள்.**

01. மாவட்ட சிறுவர் பாதுகாப்பு குழு
02. பெண்கள் சிறுவர் பிரிவு (பொலீஸ்)
03. சிறுவர் நன்நடத்தை உத்தியோகத்தர்கள்.
04. சிறுவர் உரிமை மேம்பாட்டு அலுவல்கள்.

**உசாத்துணை நூல்கள்**

* பேராதனை பல்கலைக்கழக வெளியீடான சிறுவர் கையேட்டுப் பிரதி.
* சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிய பத்திரிகைகள், சஞ்சிகைகள்.
* கலையறுவி (அரசினர் ஆசிரியர் கலாசாலை)

**G.விக்டர்**
ஆசிரியர்
பிரின்சஸ் த.வி
கோணப்பிட்டிய - கந்தப்பளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஸ்த்தமனத்தின் ஓர் உதயம்.

அன்று ஞாயிற்றுக்கிழமை வழமைப்போல் குமார் தான் வேலை பார்க்கும் வைத்தியசாலையின் விடுதியின் யன்னலினூடாக சுற்றுப்புறத்தை பார்த்த வண்ணம் இருந்தான். ஆனால் அவன் மனமோ கடந்த பதினைந்து வருடங்களுக்கு முன் நடந்த கசப்பான அனுபவங்களை அசைப்போட்டுக் கொண்டு இருந்தது.

இயற்கை எழில் நிறைந்த மத்திய மலைநாட்டின் சாதாரண தோட்டத்தில் பிறந்தவன் குமார். அவனின் பெற்றோர் அத் தோட்டத்தில் கடையொன்றினை நடாத்திவந்தனர். குமாரின் பள்ளி நண்பர்கள் ரகு,சேகர் இருவரும் அத்தோட்டத்தில் வேலை செய்த குப்புசாமி முனியம்மா, கருப்பையா, ராமாயியின் பிள்ளைகள். மூவரும் ஒரே பாடசாலையில் கல்விக் கற்கின்றனர். என்னடா ரகு இன்றைக்கு சேகர் ஸ்கூலுக்கு வரலயா? ஆமாண்டா, குமார் சேகருக்கு கொப்பி இல்லையாம். அதுதான் வரலைன்னு சொன்னான். அவுங்க அம்மா இருந்தப்ப ஒழுங்கா தான் வந்தான் அப்ப, இப்ப என்னடா நடந்திச்சி அது தெரியாதா குமார், அவுங்க அம்மா நம்ம தோட்ட துறை வீட்டுக்கு வேலைக்கு போயிட்டாங்க. எங்கடா! வேற எங்க கொழும்புக்குத்தான்.சரி வாடா நேரமாகுது வகுப்பிற்கு போவோம்.என இருவரும் கதைத்துக் கொண்டு வகுப்பறையை நோக்கிச் சென்றனர்.இருவரும் அப்பாடசாலையில் ஒன்பதாம் தரத்தில் படித்த -னர். இம்மூவரும் வகுப்பில் நன்றாக படித்தனர்.ரகுவின் தந்தை குப்புசாமி குடிப்பவர் இருந்தாளும் பிள்ளையின் தேவைகளுக்கு ஏற்ப எதையும் இனங் கண்டு செய்பவர். இவ்வாறு நாட்கள் நகர்ந்தன ஆனால் சேகர் பாடசாலை வருவது குறைந்து விட்டது.

குமாரும், ரகுவும் பாடசாலை விட்டு வீடு செல்லும் போது சேகரைக் கண்டனர். என்னடா சேகர் ஏன்டா ஸ்கூல் வரல எனக் கேட்கநா------ என்னடா செய்ய எங்க அப்பா எனக்கு ஒன்றுமே வாங்கித் தராம அம்மா அனுப்புற பணத்தை -யும் குடித்தே முடிக்கிறார். நானும் வேலைக்கு போகனும்மா? எங்கடா வேலைக்கு போகனுமா?கொழும்புக்குத்தான் குமார். எனக்கு படிக்கனும் என்று ஆசையா தான் இருக்கு. எனக் கவலையோடு கூறுகின்றான். நாங்கள் இருவரும் என்னடா செய்ய முடியும் சரிடா சேகர் நாங்க போறோம் என இருவரும் தத்தமது வீட்டுக்கு செல்கின்றார்கள். ரகு வீட்டில் நுழையும் போதே குப்புசாமியின் சத்தம் கேட்கின்றது.

முனியம்மா இங்க வா----- என்னங்க------
நீ ஏன் வெளிநாடு போகக்கூடாது? நா டவுன்ல உள்ள அப்துல்லா ஏஜன்சியி -டம் கேட்டேன். 10000ரூபா மட்டும் வேணுமா. நீ போயிட்டு அப்புறமா மீதிய வாங்கிக்கிறேனார். ஏங்க என்ன போக சொல்லுரீங்க நா போவல ஏய் நீ போகாட்டி நா என்ன செய்வேணு எனக்கே தெரியாது? என அவர் கூற முனியம்மா என்ன செய்வது கணவன் பேச்சை கேட்காவிட்டால் அடியும் விழும் என எண்ணி வெளிநாடு செல்கின்றார். அவள் அனுப்பும் பணத்தை தன் இஷ்டத்திற்கு செலவு செய்வதும் குடிப்பதும் மகன் எதற்கு பணம் கேட்கிறான் என்ற காரணமே தெரியாமல் பணத்தை அவனிடம் கொடுக்க அவனோ தனது நண்பன் சேகருடன் இணைந்து குடிப்பதும் புகைப்பிடிப்பதும் என கெட்ட பழக்கங்களை தம் வசம் கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று ஊர் திருவிழா இரவு தேர் செல்லும் போது ரகுவும், சேகரும் நன்றாக குடித்து விட்டு ஆடிக் கொண்டுவர இடையில் யாரோ ஏதொ சொல்ல சேகர் சத்தம் போடுகிறான். ஏய் யாருடா என்ன பத்த பேசுறா தைரியம் இருந்தா வாடா என அழைத்த வண்ணம் தள்ளாடுகிறான். அதனை பார்த்த சேகரும் கூட்டு சேர்ந்து கொண்டு சத்தமிட ஒருவன் கம்பு ஒன்றை எடுத்து ஓங்கி அடிக்கிறான்.அதனை தடுக்க செல்லும் சேகர்

அய்யோ ------ என அலறிய வண்ணம் சாய்கிறான். சாய்ந்தவன் மீண்டும் எழும்பவே இல்லை அய்யோ! சேகர், சேகர் என ரகு தடுமாறியவாறு அவனும் விழுகிறான். இருவரையும் அண்மையிலுள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கிறார்கள். சேகர் இறந்ததை பார்த்த ரகுவின் மனநிலையும் பாதித்துவிட்டது. அந்நிகழ்வின் பின்னர் குமார் வேறொருபாடசாலைக்குச் சென்று படிப்பினைத் தொடர்கின்றான். காலம் செல்கிறது அவனும் மருத்துவம் படித்து இன்று வைத்தியனாகி விட்டான். இவற்றை எண்ணிய குமாரின் கண்களின் ஓரத்தில் இருந்து கண்ணீரத் துளிகள் உதிர்கின்றன. அப்போது ஹலோ குமார் என்ன நின்றுகொண்டே கனவு காண்கிறாய்.............. என நிரஞ்சன் கேட்க

அது ஒன்றுமில்லை நிரஞ்சன் என் பள்ளி நாளை நினைத்தேன். ஏய் இதற்கு ஏன் அழுகிறாய் பள்ளி நாள் பசுமையானது தானே ஆமாம், பாவப்பட்ட மனிதர்களுக்கு உன் ஊரைப் பற்றியா ஆமாம் நிரஞ்சன் ஏன் அவர்கள் யோசிக்கமாட்டாங்களா? அப்படி இல்லை நிரஞ்சன் என் ஊர் பின்தங்கிய பகுதி பணம் முக்கியம் என எண்ணி அம்மாமார் வெளிநாடு செல்வதும், கொழும்புக்கு வேலைக்கு செல்வதும் ஒரு சில குடும்பங்களின் நிலை இப்படி ஆகின்றது.ஆனாலும் நிரஞ்சன் கூழைக்குடித்தாலும், தன் பிள்ளையை படிக்க வைக்க வேண்டும் என எண்ணும் சிலர் உள்ளார்கள். சிலருக்கு குடி தான் முக்கியம் நீ என்ன செய்வாய் குமார்?

என்ன செய்ய முடியும் ஊருக்கு போகும் போது ரகுவின் தோற்றம் தான் கண்முன் வரும் பாவம் நிரஞ்சன் அவன் மனநிலை பாதித்து அலைகிறான். இதற்கு நீ என்ன குமார் செய்வாய்? அவனின் தாயும் தந்தையும் தான் இதற்கு காரணம்.அதுவும் உண்மைதான் அப்படி ஒருவிடையம் நடக்கவும் தானே நீயும் உன் பிறந்த ஊரை விட்டு வரவேண்டிய நிலை ஏற்பட்டது.

அதுவும் உண்மைதான் "எட்ட நின்று பார்க்கும் போது தான் கோபுரத்தின் உயரம் தெரியும் என்பது போல எனது ஊரை விட்டு வந்த பிறகுதான் அவ்வூரின் குறைகளை அறிந்து சிறந்த சேவையை ஆற்ற முடிகின்றது.

அது சரிதான் குமார் உன் நண்பர்களின் வாழ்வும் அங்கு "அஸ்தமித்த " போதும் உனது வாழ்வின் "உதயத்தால்"இனி வரும் இளம் சமுதாயமாவது எழுச்சி பெறட்டும்.

உண்மை தான் நிரஞ்சன் அதைப்பற்றி கதைத்தால் ஒரு நாள் போதாது, வா கடை வரை போய் வருவோம்.

**திருமதி.ராஜேந்திரன் சசிகலா** - ஆசிரியை
பிரின்சஸ் த.வி
கோணப்பிட்டிய, கந்தப்பளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மை.பன்னீர்ச்செல்வம்
M.A. Dip.E.D.Trd.
நு/வ. இராகலை த.ம.வி

# சிறுவர்களின் உயரிய நலன்கள்

இலங்கை ஜனநாயக சட்டத்தின் படி சிறுவர்கள் என்போர் மனித ஜீவராசிகளில் **18** வயதை அடையாத அனைவரும் சிறுவர்களாவர். ஆரம்பத்தில் இந்த வயதெல்லை 21 ஆகவும் பின்னர் அது பற்றி சிறுவர்களின் உயரிய நலன்களை பாதுகாக்க சர்வதேச சட்டங்கள் அதேபோல இலங்கை சிறுவர்கள் சட்டங்கள் இருக்கமான சட்டங்களை, நீதிகளை முன் வைக்கின்றது. ஆரம்ப காலங்களில் சிறுவர்களை விற்கவும், ஈடுவைக்கவும் பெற்றோருக்கு முடிந்தது. காலப்போக்கில் சிறுவர் பாலியல் துஸ்பிரயோகங்கள், சிறுவர் சித்திரவதைகள், சிறுவர்களை வேலைக்கமர்த்துதல் என்பன போன்ற சிறுவர் உரிமை மீறல்கள் அதிகரிக்க தொடங்கி விட்டது. எனவே சிறுவர் உரிமை என்பதை வரை விலக்கணப்படுத்த பல்வேறு தொகுதிகளை கவனத்தில் எடுத்துக் கொள்கின்றது.

அவற்றில்

உய்வு தொடர்பான உரிமை

வளர்ச்சியும் விருத்தி தொடர்பான உரிமைகள்

சகல வகையான துஷ்பிரயோகம், சுரண்டல் என்பவற்றில் இருந்து பாதுகாப்பு வழங்கள்

பங்கு பற்றும் உரிமை

போன்றன இவற்றில் ஒவ்வொன்றும் மற்றவற்றுடன் தொடர்பு பட்டதே இதில் ஒரு தொகுதியின் இழப்பானது ஏனைய தொகுதி உரிமையையும் பாதிக்கும். எனவே சிறுவர் உரிமைகள் எல்லாப் பிள்ளைகளும் பெறவேண்டும் என எதிர் பார்க்கின்றது. சிறுவர் உரிமைகளின் அடிப்படைக் கோட்பாடுகள் என்பதில் பின்வரும் முக்கிய 3 கோட்பாடுகள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப் -படுகின்றது.

01.உரிமைகள் உடையவர் என்ற வகையில் பிள்ளையின் தனித்துவம்.
02.பாகுபாடு காட்டாமை என்ற கோட்பாடு
03.பிள்ளையின் உயரிய நலன் பற்றிய கோட்பாடு

பிள்ளையின் உயரிய நலன் பற்றிய கோட்பாட்டை எடுத்துக் கொள்வோமானால் சிறுவர்கள் தொடர்பாக அரச, தனியார் துறைகள் சமூக அமைப்புகள் நீதிமன்றங்கள் நிர்வாக அதிகார சபைகள் அல்லது சட்டங்கள், குழுக்கள் என்பன போன்ற பல நிறுவனங்கள் எடுக்கும் எல்லா நடவடிக்கை களிலும் பிள்ளையின் நன்மையே முழுமுதல் கவனம் எடுக்கப்படுகின்றது. முழுமுதல் என்பது தீர்வு எடுக்கும் போது சிறுவனின் நலன் பிரதானமாக கவனத்தில் எடுக்கப்பட வேண்டும் எனபதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையின் உயரிய நலன்கள் என்பதில் சமூகப்பாதுகாப்பு கிடைக்கப்படல் வேண்டும். அதனை உறுதிப்படுத்த தகவலும் கிடைக்க வேண்டும் என நீதி மன்றம் கூறுகின்றது. வீதியோர பிள்ளைகளும், குடும்ப சிக்கல்கள் நிறைந்த சிறுவர்களும், இரண்டாம் திருமணம் செய்து கொண்ட தாய் அல்லது தந்தையின் பிள்ளைகள் எவ்வாறு பாதுகாக்கப்பட வேண்டும். பிள்ளையின் நலன்கள் பாதுகாப்பு என்பன சரியாக தீர்மானித்த பின்பே பெற்றோர்கள் ஏனைய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். இங்கு பிள்ளையின் முழுமுதல் நலனுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதை காணலாம்.

அதே போல் தகவல் நடவடிக்கையில் பிள்ளைக்கு பொதுவான பாதுகாப்பு பெற்றோரிடம் இருந்து கிடைக்காத விடத்து அது பொருத்தமான 3ம் நபரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்கிறது. சிறுவர்களின் உயரிய நல்ன்கள் என்பதில் அவர்களின் பராமரிப்புச் செயற்பாடுகள் முக்கியமான -தாகும். குறைந்த பட்சம் பொருளாதார ரீதியாகவாவது பிள்ளைகள் நலனை பெற்றுக் கொள்ள வேண்டும் என இதனூடாக எதிர்பார்க்கப்படுகிறது. பெற்றோர்கள் பிரிவதால் ஏற்படும் மனவெழுச்சிப் பிரச்சினையை இதன் மூலமாவது தீர்க்க நலன் எடுக்கப்படுகின்றது.

தத்தெடுத்தல் சம்பந்தமாக பிள்ளையின் உயரிய நலனை பாதிக்கின்ற வகையில் அமையக்கூடாது. இடப்பெயர்வு பொய்யான குறிப்பேடுகளைத் தயாரித்தல் போன்றவை நடைமுறையில் உள்ள பிரச்சினைகளாகும்.அவற்றை நிவர்த்திக்கின்ற வகையில் அளவீடுகள் அமைதல் வேண்டும். இதற்காக இஸ்லாமிய சட்டங்கள் கூட மாற்றப்பட்டிருக்கிறது. சிறுவர்களின் உயரிய நலன் என்பதில் பாராமரிப்பு நிலையங்களின் அசமந்தப்போக்கும் சரியான முறையான கவனிப்பு இன்மையாலும் இவ்உரிமைகள் பாதிக்கப்படுகின்றது. பிள்ளை தனது கருத்தை தெரிவிக்கவும் இப்பராமரிப்பு நிலையங்களில் சுதந்திரமாகவும் தன்னிச்சையாகவும் வாழ வழி தேவைப்படுகிறது.

பிள்ளையின் உயரிய நலக் கொள்கையில் பங்கு பற்றும் உரிமை முக்கியமானதாகும். சிறுவர்கள் 18 வயதுக்கு குறைவானவர்களாயின் தொழிற் சங்கத்தில் சேர்வதற்கு உரிமை இல்லை என்றாலும், இலங்கையில் 14-16 வயது உள்ள பிள்ளைகள் தொழில் செய்வதை காணக்கூடியதாகவுள்ளது. இதன்போது அவர்கள் தொழிற் சங்கத்தில் சேர்வது தடுக்கப்படுமாயின் அது உயரிய நலஉரிமையை தடுத்ததாக்கப்படும். அத்தோடு அவர்களுக்கு பேச்சு சுதந்திரம், கருத்து சுதந்திரம், மனசாட்சி சுதந்திரம் என்பன அடிப்படை மனித உரிமைகளாக, நல உரிமைகளாக முன்வைக்கப்படுகின்றது.

இத்தகைய உயரியநல உரிமைகளை பாதுகாத்து சிறுவர்களை சிறுவர்களாக சுதந்திரமாக வாழ விடுவதே உயரிய நல உரிமைக் கொள்கை வற்புறுத்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புள்ளி வழங்கல் முறைகள் மாணவர்களை ஊக்கப்படுத்துகின்றனவா?

வகுப்பறையொன்றில் பொதுவாக தனியாள் வேறுபாடுடைய மாணவர்கள் (மெல்லக்கற்போர், சராசரி மாணவர்கள்,மீட்திறனுடைய மாணவர்கள்) காணப் படுகின்றார்கள். இவர்கள் அனைவரையுமே குறிப்பிட்ட நோக்கத்தை / குறிக் கோளை அடையச்செய்வதில் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. அந்த வகையில் அவர்களுக்காக பல்வேறுபட்ட கற்பித்தல் செயற்பாடுகளை வழங்க திட்டமிட வேண்டியுள்ளது. இத்திட்டமிடலில் குறிப்பிட்ட சிலவே குறிப் பிட்ட நோக்கத்தை/ குறிக்கோளை அடையச்செய்வதில் வெற்றிபெறுகிறது. அவற்றுள் ஒன்றே புள்ளி வழங்குதலோடு தொடர்புடைய செயற்பாடுகள் ஆகும். புள்ளி வழங்குதல் செயற்பாடுகள் நிச்சயம் மாணவர்களை ஊக்கப்படுத்துகின்றன.

இப் புள்ளி வழங்கள் செயற்பாடுகள் மிகவும் உயர்ந்த அளவில் இடைநிலை வகுப்பில் (தரம் 6,7,8,9) கற்கும் மாணவர்களையே பெரிதும் ஊக்கப்படுத்து கின்றது. பொதுவாக அனைத்து வகுப்புகளிலும் மீட்திறன் கொண்ட மாணவர் -கள் காணப்படுவார்கள். அவர்களிலும் ஒரு மாணவன் மட்டுமே எப்போதும் முதலிடத்தில் இருப்பார். இதனால் சராசரி மாணவர்களே மீட்திறன் கொண்ட மாணவர்களோடு போட்டியிட்டு முதல் நிலையை அடைய முயற்சிப்பது இல்லை. ஆனால் இப்புள்ளி வழங்கள் முறைகளினூடாக சராசரி மாணவர்கள் மீட்திறன் மாணவர்களுடன் போட்டியிட்டு முதல்நிலையை அடையும் மனநிலை -யையும், ஆர்வத்தையும் பெறுகிறார்கள். அவ்வாறான சந்தர்ப்பங்களை இப் புள்ளி வழங்கள் செயற்பாடுகள் ஏற்படுத்துகின்றன.

அதாவது இடைநிலை வகுப்புகளில் ஒவ்வொரு பாடம் தொடர்பாகவும் பல்வேறுபட்ட முறைகளில் கணிப்பீடுகள் மேற் கொள்ளப்படுகின்றன. இப் பல்வேறுபட்ட கணிப்பீடுகளுக்கு பல்வேறு நியதிகள் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படுகின்றது. இந்நியதிகளை வரையறை செய்யும் போது வகுப்பறை யில் உள்ள அனைத்து மாணவர்களுக்கும் பொதுவான வகையில் வரையறை செய்ய வேண்டும். இவ்வாறு பொதுவான நியதிகளை வரையறை செய்யும் போது மீட்திறன் கொண்ட மாணவர்களோடு சராசரி மாணவர்கள் எளிதாக போட்டியிட வாய்ப்பு ஏற்படுகின்றது.

உதாரணமாக குறிப்பிட்ட கணிப்பீடு ஒன்றுக்காக பல்வேறு நியதிகள் அடிப் படையில் நூறு புள்ளிகள் வழங்கப்படுகின்றது. இந்நியதிகள் அழகான/தெளி -வான எழுத்து, குறிப்பிட்ட நேரத்தில் பயிற்சிகளை நிறைவு செய்தல், அனை -த்துமே சரி எடுத்தல், அறிவுத்தல்கள் அனைத்துமே பின்பற்றியிருத்தல், எழுத்துப்பிழை இன்றி இருத்தல், ஒப்படையெனில் அழகாக ஒழுங்கமைத்தல் போன்றவாறு அமைகின்றன. இந்நியதிகள் அனைத்திலுமே தலா இருபது புள்ளிகளை மீட்திறன் கொண்ட மாணவர்கள் பெறும் சந்தர்ப்பங்கள் குறைவு மாறாக மீட்திறன் கொண்ட மாணவர்களை விட சராசரி மெல்லக்கற்கும் மாணவர்களே அழகான தெளிவான எழுத்தை அல்லது கிரமமாக அறிவுத்தல் -களை பின்பற்றுபவர்களாக இருப்பர். இவ்வாறான நுட்பங்களை/



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தர்ப்பங்களை சராசரி, மெல்லக்கற்கும் மாணவர்களுக்கு இனங்காட்டிக் கொடுப்பதனூடாக,அவர்கள் மீட்திறன் கொண்ட மாணவர்களுடன் போட்டியிட்டு முன்வருவதில் தீவிர ஆர்வம் காட்டுகின்றனர். இதனூடாக தொடர்ந்து வகுப்பில் முதலாம் இடம் பெற்ற மாணவனை ஏனைய மாணவர்கள் முந்திச்செல்லவும், தனது நிலையை தக்க வைத்துக் கொள்ள கடுமையாக முயற்சி செய்யவும், போட்டியிடவும், தேடிக்கற்கவும் சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன. இதனால் நேர்த் -தியான கற்றல் செயற்பாடுகளையும் மேற்கொள்ள முடிகின்றது.

மேற்படி முறைகளினூடாக மாணவர்களின் வரவும் சீரானதாக மாறக் கூடிய சந்தர்ப்பம் ஏற்படுகின்றது. மேலும் மாணவர்களிடம் புதுப்புது விடயங்களை தேடிக்கற்கும் ஆர்வம் பிறக்கின்றது. ஒப்படை, தனியாள் செயற்பாடு, தனியாள் செயற்திட்டம், வாசிப்பு பரீட்சை, குழு செயற்பாடு போன்றவாறான கணிப்பீடு -களை நேர்த்தியாகவும் திறமையாகவும் மேற்கொள்ள முனைகிறார்கள் நேரத்தை உரியவாறு பயன்படுத்துவதோடு கணிப்பீட்டு வேலைகளுக்கும் பூரண ஒத்துழைப்பை வழங்குகிறார்கள். இதனால் பாடத்திட்டத்தையும் உரியவாறு பூர்த்திசெய்து கொள்ளும் வாய்ப்பு ஏற்படுகின்றது.

இப்புள்ளி வழங்கள் செயற்பாடுகளை மாணவர்களின் புறநடவடிக்கைகள் தொடர்பாகவும் மேற்கொள்ளும்போது மாணவர்களின் புறநடவடிக்கைகளிலும் எதிர்பார்க்கும் வெளிப்பாடுகளை அவதானிக்க முடிகின்றது.மாணவர்கள் பொது இடங்களில் நடந்துகொள்ளும் முறை, சகபாடிகளுடன் உறையாடும் பாங்கு, ஆசிரியர்களுடன்உரையாடும் பாங்கு, பணிவு, அன்றாட பாடசாலை நடவடிக்கை களை மேற்கொள்ளும் முறை, நிகழ்ச்சிகளில் திறமைகளை வெளிப்படுத்துதல், ஆளுமை, சீருடை அணிதல், வெளிச்சூழலில் மாணவர்களின் நடத்தைக் கோலங்கள் போன்றவாறான நியதிகளின் அடிப்படையில் புள்ளிகள் வழங்குவத னூடாக மாணவர்களிடம் ஒரு நேர்த்தியைக் காணலாம். இதற்காக அனைத்து ஆசிரியர்களினதும், பெற்றோர்களினதும் ஒத்துழைப்பைபெற்றுக்கொள்வதும் அவசியமாகும்.

அந்த வகையில் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளிலும் புறநடவடிக்கை களிலும் எதிர்பார்க்கும்மாற்றங்களை தோற்றுவிக்க இப்புள்ளி வழங்கல் செயற் -பாடுகள் பெரிதும் உதவுகின்றது. மாறாக மாணவர்கள் இடர்படும் சந்தர்ப்பங் -களிலே, நடத்தை பிறழ்வான நடவடிக்கைகளில் ஈடுபடும் சந்தர்ப்பங்களிலோ, உடல், உள ரீதியான தண்டனைகளை வழங்குவதானது பாரிய பாதிப்புக்களை ஏற்படுத்தி விட இடமுண்டு. மாறாக தண்டனைகளைக் கூட புள்ளி வழங்களி -னூடாக வழங்கலாம். இதனூடாக மாணவர்கள் தனது தவறை திருத்திக் கொள்ளவும், இடர்பாட்டை கடந்து முன்வரவும் முயற்சி செய்வர். அதாவது புள்ளிகளை குறைத்து வழங்குவதினூடாக நடத்தை பிறழ்வில் ஈடுபட்ட மாணவன் தனது தவறுகளை ஏனைய மாணவர்களின் நன்நடத்தைகளோடு ஒப்பிட்டு திருத்திக் கொள்ள முற்படுவர்.

**A.சதீஸ்குமார் ஆசிரியர்**
பிரின்சஸ் த.வி
கோணப்பிட்டிய,கந்தப்பளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குழந்தைப் பருவம்

குழந்தைப் பருவம் என்பது குழந்தை பிறந்தது முதல் ஐந்து வயதை பூர்த்தியடையும் வரை உள்ள பகுதி. ஒரு குழந்தை பிறந்தவுடன் அதாவது தாய் எந்த மனநிலையில் இருக்கிறாரோ அதை பிரதிபலிக்க கூடியதாக குழந்தை காணப்படும். தாய் சந்தோஷமாகவும் சத்தான உணவுகளை உட் கொண்டு இயற்கையான ரசனைகளை கேட்டு மெல்லிசை பாடல்களை கேட்க வேண்டும் எனவும் அதிர்ச்சி தரக்கூடிய பாடல்களையோ, சண்டை காட்சிளையோ பார்க்க கூடாது எனவும் கூறுகின்றார்கள். மனித மூளையின் 80% வளர்ச்சி நடைபெறுவது தாய் கர்ப்பம் தரித்த நாளில் இருந்து குழந்தை பிறந்து இரண்டு ஆண்டுகள் வரையிலான காலப்பகுதியில் எனவே கர்ப்பிணி தாய்மார் போதியளவு புரதம் உட்கொள்ளல் வேண்டும். இல்லா விட்டால் குழந்தைகளின் மூளைவளர்ச்சி பாதிக்கப்படும்.

ஆனால் குழந்தை மந்த போசணை குறைபாட்டிற்கு உள்ளாகும். உடல் சோர்வு, ஆரோக்கியம் அற்ற குழந்தையாக வளரும் எனவே இதனை பெற்றோர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். ஒரு தாயின் பிரதான கடமை குழந்தைக்கு தாய்ப்பால் வழங்குவது. தாய்ப்பாலில் தான் அதிக ஊட்டச் சத்தும், நோய் எதிர்ப்பு சக்தியும் காணப்படுகின்றது. எனவே ஒரு தாய் தன் குழந்தைக்கு கட்டாயமாக இரண்டு வருடத்திற்கு தாய்ப்பால் வழங்க வேண்டும். அவ்வாறு வழங்கும் போது தான் அக்குழந்தை சிறந்த ஆரோக்கி -யமான குழந்தையாகவும் சுறுசுறுப்பான குழந்தையாகவும் வளரும். அவ்வாறு அந்த குழந்தைக்கு தாய்ப்பால் மறுக்கப்படுமாயின் அந்த குழந்தை உள (மனது) ரீதியாக பாதிப்படையும் இதனால் விரல்களை வாயில் வைத்து கொள்ளும் அல்லது வேறு பொருட்கள், விளையாட்டு பொருட்கள் போன்ற -வற்றை வாயில் வைத்துக் கொள்ளும்.

இவ்வாறு தாய்ப்பால் மறுக்கப்படும் குழந்தைகள் தான் எதிர்காலத்தில் புகைப்பிடித்தல், மதுபானங்கள் அருந்துதல் போன்ற செயல்களில் ஈடுபட வாய்ப்பு உள்ளது. பிறந்தது முதல் குழந்தை பாடசாலைக்கு செல்லும் வரையான காலப்பகுதியை குழந்தைகளின் புலனியக்க பருவம் என்று அழைக்கலாம். இந்த குழந்தைகளை அவர்களின் வழியிலேயே விட வேண்டும் அவர்களுக்கு எதனையும் மறுக்க கூடாது. கேட்கும் பொருட்கள் ஆசைப்படும் உணவுகள், உடைகள் என்பவற்றை வழங்கி இவர்களின் வழியிலேயே விடவேண்டும் அவ்வாறு செயற்படாவிட்டால் இவர்களின் உளத் தேவை பூர்த்திசெய்யப்படமாட்டாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களின் உடல் திடகாத்திரமாகவும், ஆரோக்கியமாகவும், தெளிவு தன்மை கொண்டதாகவும் காணப்படும். இவர்கள் ஓடியாடி விளையாடக் கூடியவர்களாக காணப்படுவார்கள். அவர்களை சிறு வயதில் இருந்தே உடற்பயிற்சி செய்வதன் மூலம் சிறந்த ஒரு விளையாட்டு வீரராகவோ ஒரு வைத்தியராகவோ, ஒரு பொறியலாளராகவோ, ஒரு வழக்கறிஞராகவோ உருவாக்க முடியும். இவ்வாறு இந்த குழந்தைகளின் சூழல் மிக முக்கியமானது இவர்கள் எவ்வாறான சூழலில் இருக்கின்றார்களோ அதன் பிரதிபலிப்பாகவே இவர்கள் காணப்படுவார்கள். இவர்கள் இந்த வயதில் நாம் எதை பேசுகின்றோமோ அதனையே பேசும் ஆற்றல் கொண்டவர்கள்.

இவர்களை வளர்க்கும் பெற்றோர்கள் இவர்களிடம் அன்பாகவும் பாசத்துடனும் செயல்பட வேண்டும். பெற்றோர் குழந்தைகளை வைத்துக் கொண்டு மதுபாணம் போன்றவற்றை அருந்துவார்களேயானால் அது அந்த குழந்தைக்கு தாக்கத்தை ஏற்படுத்தும் அத்தோடு பெற்றோர்கள் சண்டை பிடிப்பவர்களாக காணப்பட்டால் குழந்தை பயந்த சுபாவமுடைய குழந்தையாக காணப்படும் அது குழந்தையின் எதிர்காலத்தை பாதிப்படையச் செய்யும்.

இந்த குழந்தைகள் ஐந்து அல்லது ஆறு வயதில் பாடசாலைக்கு செல்லும் போது பெற்றோர்கள் மற்றும் சமூகத்தினர், அயலவர்கள், உறவினர்கள், நண்பர்களுடன் பேசி பழகிய வார்த்தைகளை எடுத்துக் கொண்டே பாடசாலைக்கு செல்லுகிறார்கள். இவ்வாறு பாடசாலைக்கு செல்லும் குழந்தைகள் 2500 வார்த்தைகளை அல்லது அதற்கு மேல் தெரிந்து கொண்டு தான் பாடசாலைக்குச் செல்வார்கள். எனவே குழந்தை பருவம் என்பது பெற்றோரின் அரவணைப்பில் ஓடி விளையாடி அவர்களின் விருப்பத்திற்கு வளர்வார்களேயானால் எமது ஊரிற்கும் பிரதேசத்திற்கும் சிறந்த ஒரு ஆரோக்கியமான பிரஜையை உருவாக்க முடியும்.

ப.கோபிநாத்
(ஆசிரியர்)

''இன்று உன்னுடையது – அது
நாளை என்னுடையது
எதனை கொண்டு வந்தாய் – மீண்டும்
எடுத்துச் செல்ல''

கீதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் கல்வியல் குடும்ப சமூகங்களின் பங்களிப்பு

சிறுவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் விருத்திக்கும் குடும்பம் என்ற அமைப்பும், சமூகமும் மிக முக்கியமான இடத்தினை வகிக்கிறது. எனினும் குடும்ப அங்கத்தவர்களின் அன்பும், ஆதரவும் நெருங்கிய உறவு மற்றும் சமூகத்தின் பங்களிப்பும் சிறுவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவுகின்றன. இக்குடும்ப உறவுகளில் ஏற்படும் விரிசல்கள், தாய் தந்தையரிடையே ஏற்படும் கருத்து வேறுபாடு, பிரிவு போன்றவைகளால் சிறுவர் கல்வி பாதிப்படைகிறது.

மேலும் பொதுவாக இலங்கையில் மது பாவனை, குடும்ப வன்முறை சிறுவர் துஷ்பிரயோகம், சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல் போன்ற காரணிகளா -லும் நீண்ட நாட்களாக நடைபெற்று வரும் யுத்தம் காரணமாக இடம்பெயர்வு, காணாமல் போதல். அகதி முகாம் வாழ்க்கை போன்ற புறக்காரணிகளாலும் சிறுவர் கல்வி பாதிப்படைகிறது.

மலையக சமூதாயத்தை நோக்கும் போது சிறுவர்களின் கல்வி துறையில் குடும்ப மற்றும் சமூகங்களினது பங்களிப்பானது மிக மோசமான நிலையில் உள்ளது. இதற்கு சில குடும்ப காரணிகளும், சமூகக் காரணிகளும் செல்வாக்கு செலுத்துகின்றன. குடும்ப காரணியை பொறுத்த மட்டில் மலையகத்தின் பெரும்பாலான குடும்பங்களில் தந்தையர்களது போதைவஸ்து பாவனையால் ஒரு குடும்பத்தின் சிறிய வருமானத்தில் கூடுதலான பங்கு இது போன்ற தவறான நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதால் பின்வரும் பிரச்சி -னைகளுக்கு வழி வகுக்கின்றுது.

01. சிறுவர்களுக்கான போசாக்கு உணவுகள் முறையாக வழங்கப்படாத காரணத்தால் மந்த போசணை நிலை உருவாதல்.
02. அன்றாட வாழ்க்கைக்கு தேவையான உடைகள், சீருடைகள் பெற்றுக் கொள்ள முடியாமை.
03. தாய் தந்தையரிடையே புரிந்துணர்வு அற்று குடும்ப பிணக்குகளால் பிரிவுகள் ஏற்பட்டு பிள்ளைகள் அநாதைகளாக்கப்படுவதோடு அவர்கள் சமூகத்தில் தவறான வழிக்கு இட்டுச் செல்கின்றது.
04. குடும்பங்களின் வருமான மட்டம் குறையும் போது கல்வி கற்கும்; 5-14 வயதுடைய சிறுவர்களை வேலைக்கு அமர்த்த வேண்டிய நிலை உருவாதல்.

எனவே இது போன்ற குடும்ப காரணிகளினால் கல்வி கற்கும் சிறார்களுடைய தேவைகள் முறையாக நிறை வேற்ற முடியாத சூழ்நிலை தோற்றம் பெறுகின்றது.

சமூக காரணிகளை ஆராயும் போது ஜாதி, மதம், பிள்ளைகள் கல்வி கற்ப -தற்கான சிறந்த சூழல் இல்லாமை, சமூகங்களை வழிநடத்துவதற்கு சிறந்த தலைமைத்துவம் இல்லாமையினாலும், பரம்பரை கலாச்சார விழுமியங்கள் போன்றன சிறுவர் கல்வியில் கூடுதலான பங்களிப்பு செய்கின்றது. அதுமட்டு -மின்றி எமது சமுதாயமானது பலமதங்களை கொண்டு உருவாக்கப்பட்டுள்ள போதும், ஒவ்வொரு மதத்தை சேர்ந்தவர்கள். அவரவர் மதத்தின்கொள்கைகள் கலாச்சார விழுமியங்கள், போதனைகளை பின்பற்றாது பிற மதங்களை தூற்றுவதும், தனது மதத்தினை பரப்புவதுமான கொள்கைகளை கொண்டு செயற்படுவதால் அது பாரிய கலாச்சார சீரழிவுகளை தோற்றுவிப்பதோடு மட்டு மல்லாது ஒரு சிறந்த கட்டுக்கோப்பான சமுதாயத்தை தோற்றுவிப்பதை தடுக் -கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே இது போன்ற காரணிகளும் சிறுவர் கல்வி பின்னடைவுகளில் ஓர் அங்கமாக விளங்குகின்றது. ஆகவே சிறந்த ஒரு எதிர்கால சமுதாயத்தை உருவாக்க வேண்டுமெனின் சிறுவர்களின் உரிமைகள் மதிக்கப்பட்டு அவர்க -ளுக்கு சிறந்த கல்வியை வழங்குவதற்கான சந்தர்ப்பத்தினையும், சூழ்நிலைக ளையும் உருவாக்கி கொடுப்பதன் மூலமே. "இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்" என்றதொனிப் பொருளுக்கு ஏற்ற ஒரு சமுதாயத்தை உருவாக்க முடியும்.

குறிப்பு:- "ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமை சாசனத்தின் படி 18 வயதுக்கு கீழ்பட்டவர்கள் யாவரும் ,சிறுவர்களாவர்"

மலையக சமுதாயத்தில் காணப்படும் அதிகமான சாதி வேறுபாடு காரணமாக உயர்ந்த தாழ்ந்த சாதி காரணமாக திறமையான பிள்ளைகளின் கல்வி பாதிப்படைகின்றது. "ஒரு உயர்ந்த கட்டிடத்திற்கு அதன் அத்திவாரம் எவ்வளவு முக்கியமோ அது போன்று ஒரு மாணவனின் சிறந்த எதிர்கால கல்வி வளர்ச்சிக்கு முறையான கல்வி பொருத்தமான சந்தர்ப்பத்தில் வழங்குதல் வேண்டும்"

"விலை கூடிய விளையாட்டுப் பொருட்களை வாங்கிக் கொடுப்பதை விடப் பிள்ளை விரும்பும் எளிமையான பொருட்களைக் கொடுப்பதன் மூலம் பிள்ளையின் விருத்திக்கு உதவலாம்"

**கந்தசாமி கேதீஸ்வரன்** ஆசிரியர்
பிரின்சஸ் த.வி
கோணப்பிட்டிய, கந்தப்பளை

## விண்வெளி விந்தைகள்

01. பிரபஞ்சத்தில் (Universe) பூமியின் நிலை.பூமி, ஞாயிற்றுத்தொகுதி என்ற சூரிய மண்டலத்தின் (Solarsystem) ஒரு பகுதி ஞாயிற்றுத்தொகுதி. பால் வழி (Milky Way) என்ற அண்டத்தின் (Galaxy) ஒரு பாகம். அண்டமோ பிரபஞ்சத்தின் துகள் எனவே, பிரபஞ்ச வெளியில் நமது பூமி ஒரு குண்டூசியின் பருமனுக்குச் சமன்.

02. பிரபஞ்சம் (Universe) எவ்வாறு தோன்றுகின்றது?

ஆதியும்,அந்தமும் வரையறுக்கப்பட்ட எல்லைகளும் அற்ற வான் வெளியே பிரபஞ்சமாகும். இப்பிரபஞ்சம் என்ற பேரண்டம் எவ்வாறு தோன்றியது. என்பதில் விஞ்ஞானிகளிடையே கருத்து வேறுபாடுள்ளது. எனினும் இரு கருதுகோள்கள் குறிப்பிடத்தக்கன.

ஒழுங்கு நிலை (Steady State) கருதுகோளின்படி, இன்று பிரபஞ்சம் காணப் படுகின்ற நிலையிலேயே, அதில் காணப்படுகின்ற பொருட்களுடனேயே பிரபஞ்சம் என்றுமிருந்தது. அண்டங்கள் (Galaxies) அழிவுறும் போது மட்டுமே அதனைச் சமன்படுத்த புதியதொரு அண்டம் உருவாகிறது என்பதாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும் சிதறல் / வெடிப்பு மூலம் பிரபஞ்சத்தின் பிறப்பை விளக்கும் கருது கோள் முக்கியமானது. இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தியின் காரணமாக ஆக்கப்பட்ட கடினமான பழைய பொருட்கள் யாவும் ஒன்று சேர்ந்து ஒரு சக்தித் திரளாகக் காணப்பட்டன. இச்சக்தித் திரள் சிதறி வெடித்தது. அந்த இராட்சதச் சிதறல் 500 கோடி ஆண்டுகளுக்கும் 800 கோடி ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட கால வேளையில் நிகழ்ந்திருக்க வேண்டும் எனக் கணித்துள்ளனர்.

03.பிரபஞ்சம் எவ்வளவு பெரியது?

இலகுவில் வரையறுத்துக் கூறிவிட முடியாது. ஆனால் பிரபஞ்சமானது 200,000 மில்லியன் கிலோ மீற்றர் குறுக்களவு வரையுடையது என குறித்து மதிப்பிடலாம். நமக்குத் தெரிகின்ற அதிகார விண்பொருள் 8000 மில்லியன் ஒலியாண்டுத் தூரத்திலுள்ளது. நாங்கள் கண்டு பிடிக்கின்ற அந்த ஒளி புறப்பட்ட வேளையில் நம்து பூமி தோன்றியிருக்கவில்லை என்பது வியப்பான சங்கதி. பிரபஞ்சம் விரிவடைந்து கொண்டிருக்கிறது. அது விரிவடைய அதனுள் மிக அடர்த்தியாகவும், இறுக்கமாகவும் சேர்ந்திருந்த அண்டத் துகள்களும், வாயுக்களும் தன் நிலைவிட்டு விரிந்து ஐதாகப் பரவுகின்றன. பொருள் திணிவுள்ள பொருட்களின் அளவுகள் மாறாமல் பிரபஞ்சத்தின் பரந்தவெளி மாத்திரம் பெருக்கமடைகிறது என்கின்றனர்.

04.சூரிய மண்டலம் என்பது யாது?

சூரியன் அதனை ஆதாரமாகக் கொண்ட ஒன்பது கோள்கள் (புதன், வெள்ளி, பூமி, செவ்வாய், வியாழன், சனி, யூரேனஸ், நெப்டியூன், புளூட்டோ) சந்திரன் முதலான 47 துணைக்கோள்கள் உடுப்போலிகள் என்பன சேர்ந்த ஒரு தொகுதியே சூரிய மண்டலம் ஆகும்.

05.நட்சத்திரங்கள் என்றால் என்ன? கோள்கள் என்றால் என்ன?

தாமாகவே ஒளி வீசுவன நட்சத்திரங்களாகும், சூரியன் ஒரு நட்சத்திரம், நட்சத்திரங்களிலிருந்து பெற்ற ஒளியைத் தெறித்துப் பிரகாசிப்பன கோள்களாகும். பூமி, வியாழன், சனி என்பன கோள்களாகும்.

06. உடுக்கள் ஏன் உடுத்தொகுதிகளாக அல்லது இராசி மண்டலங்களாகத் தொகுக்கப்பட்டுள்ளன?

வானத்தை அவதானித்த நமது பண்டைய மக்கள், வானத்து நட்சத்திரங்கள் கண்களுக்குத் தெரிந்த விலங்குகள், மக்கள் என்பன -வற்றின் வடிவங்களில் தெரிவதாக எண்ணினர். அதனால் அவற்றுக்குப் பெயருமிட்டழைத்தனர். வானிலையாளர்களும் ஆய்வின் இலகு கருதி அவற்றை அப்பெயர்களினால் அழைத்தனர். சூரியனை சுற்றி ஒரு நீள் வட்டப் பாதையில் தெரியும். உடுக்களைப் பன்னிரு ராசி மண்டலங்களாக சோதிடர்கள் வகுத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. இராசி மண்டல உடுக்கள் யாவை?

| | | |
|---|---|---|
| மேஷம் | - | Aries |
| ரிஷபம் | - | Taurus |
| மிதுனம் | - | Gemini |
| கடகம் | - | Cancer |
| சிம்மம் | - | Leo |
| கன்னி | - | Virgo |
| துலாம் | - | Libra |
| விருச்சிகம் | - | Scorpio |
| தனு | - | Sagittarius |
| மகரம் | - | Capricorn |
| கும்பம் | - | Aquarius |
| மீனம் | - | Pisces |

08. அவற்றின் அடையாளங்கள் எவை?

| | | |
|---|---|---|
| மேஷம் | - | செம்மறிக்கடா |
| ரிஷபம் | - | எருது |
| மிதுனம் | - | இரட்டையர் |
| கடகம் | - | நண்டு |
| சிம்மம் | - | சிங்கம் |
| கன்னி | - | கன்னி |
| துலாம் | - | தராசு |
| விருச்சிகம் | - | தேள் |
| தனு | - | வில்லம்பு |
| மகரம் | - | கடலரக்கன் |
| கும்பம் | - | நீர்பானை (குடம்) |
| மீனம் | - | மீன் |

ஆக்கம்
M.துசிதாதேவி (தொண்டராசிரியர்)
பிரின்சஸ் த.வி.கோணபிட்டிய
கந்தப்பளை.

பிரான்ஸ் ஒரு முழுநகரமே பாடசாலைக்கு செல்கின்றது
பற்றிஸ் மேயர் -பிஸ்ச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டங்களினதும் சமுத்திரங்களினதும் பரப்பளவுகள்

01. ஆசிய கண்டத்தின் பரப்பு 43,998,000 சதுர கி.மீ
02. ஐரோப்பா கண்டத்தின் பரப்பு 97,00,000 சதுர கி.மீ
03. அவுஸ்திரேலியா கண்டத்தின் பரப்பு 76,14,500 சதுர கி.மீ
04. ஆபிரிக்கா கண்டத்தின் பரப்பு 2,980,0000 சதுர கி.மீ
05. வட அமெரிக்க கண்டத்தின் பரப்பு 2,432,0000 சதுர கி.மீ
06. தென் அமெரிக்க கண்டத்தின் பரப்பு 175,98,000 சதுர கி.மீ
07. அந்தாட்டிக்கா கண்டத்தின் பரப்பு 142,39,000 சதுர கி.மீ
08. இந்து சமுத்திரத்தின் பரப்பு 73,452,000 சதுர கி.மீ
09. அத்திலாந்திக் சமுத்திரத்தின் பரப்பு 82,439,000 சதுர கி.மீ
10. பசுபிக் சமுத்திரத்தின் பரப்பு 165,241,000 சதுர கி.மீ
11. ஆட்டிக் சமுத்திரத்தின் பரப்பு 13,986,000 சதுர கி.மீ

G.தினேஸ்குமார்
தரம்-07.

# இலங்கையைப் பற்றி அறிந்து கொள்வோம்.

1. இலங்கை இந்து சமுத்திரத்தில் வெப்ப வலயத்தில் அமைந்துள்ளது.
2. இலங்கை 1948ம் ஆண்டு பெப்ரவரி 4ஆம் திகதி சுதந்திரம் பெற்றது.
3. இலங்கையைச் சுற்றி 1600 k.m நீளமான கடற்கரை உள்ளது.
4. இலங்கையின் பரப்பளவு 65,610 சதுர கி.மீ
5. இலங்கை ஒரு ஒற்றையாட்சி நாடாகும்.
6. பருத்தித் துறையில் இருந்து தெய்வெந்திர முனைவரை 447k.m. நீளம் கொண்டது இலங்கைத் தீவு.
7. இலங்கையின் தரைத்தோற்ற உறுப்புக்கள் கரையோர சமவெளி, உள்ளகச் சமவெளி, மத்திய மலைநாடு என்பனவாகும்.
8. இலங்கையின் முக்கியமான கடற்கரைகள் சில------

   I. அம்பலாங் கொடையிலிருந்து ஹிக்கடுவ வரையிலான கடற்கரை (காலி மாவட்டம்)

   II. வெளிகமவில் இருந்து மாத்தறை வரையிலான கடற்கரை (மாத்தறை மாவட்டம்)

   III. அருகம் குடா கடற்கரை ( அம்பாறை மாவட்டம்)

   IV. நிலாவெளி கடற்கரை (திருகோணமலை மாவட்டம்)

   V. பாசிக்குடா கடற்கரை (மட்டக்களப்பு மாவட்டம்)

K.மணிமேகலா
தரம்-07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெரிந்து கொள்வோம்

01. தேயிலை ஆராய்ச்சி நிலையம் எங்குள்ளது?
தலவாக்கலை.

02. இறப்பர் ஆராய்ச்சி நிலையம் எங்குள்ளது?
அகலவத்தை.

03. இறப்பர் பட்டு ஆராய்ச்சி நிலையம் எங்குள்ளது?
கண்டி

04. அரிசி உற்பத்தி ஆய்வு நிலையம் எங்குள்ளது?
அனுராதபுரம்.

05. சீமெந்து தொழிற்சாலைகள் எங்கெங்கு அமைந்துள்ளது?
காலி, புத்தளம், காங்கேசன்துறை.

06. காகித தொழிற்சாலைகள் எங்கெங்கு அமைந்துள்ளது?
வாழைச்சேனை, எம்பிலிபிட்டிய, ராஜாங்கன.

07. உலோக ஆலை எங்குள்ளது?
யக்கல.

08. பால் பதனிடும் தொழிற்சாலை எங்குள்ளது?
அம்பேவல.

09. சீனி தொழிற்சாலைகள் எங்கெங்கு அமைந்துள்ளது?
கந்தளாய், இங்குராணை, பெலவத்த

10. புடைவை ஆலைகள் எங்கெங்கு அமைந்துள்ளன?
வெயாங்கொடை, பூகொட, துல்கிரிய.

R.சஞ்சீவகுமார்
தரம்-08

## வெள்ளி

* ஞாயிற்றுத் தொகுதியில் உள்ள கோள்களில் மிகவும் பிரகாசமான கோள் வெள்ளி (VENUS) ஆகும்.
* இது சூரியனிலிருந்து 108 மில்லியன் கி.மீ தூரத்தில் உள்ளது.
* வெள்ளியின் விட்டம் 12,100 கி.மீ ஆகும்.
* இது சூரியனை ஒரு முறை சுற்றிவர 224 நாட்களையும், தன்னைத் தானே சுழல்வதற்கு 243 நாட்களையும் எடுத்துக் கொள்கிறது.
* சூரியன் உதிப்பதற்கு முன் இதனை 'விடிவெள்ளி' ஆகவும் சூரியன் அஸ்தமித்ததன் பின்னர் இதனை 'நாளை வெள்ளி' ஆகவும் காணலாம்.
* இக்கோளின் மேற்பரப்பு தான் பெறுகின்ற சூரிய ஒளியில் 75 சதவீதத்தை தெறிந்து விடுகின்றது. அதனால் மிகவும் பிரகாசமாகவுள்ளது.
* புவியிலிருந்து நோக்குவோர்க்குத் தெரிகின்ற வெள்ளியின் பிறை நிலையங்கள் தனித்துவமானவை. வெள்ளிக் கோள், சூரியனுக்கும் புவிக்கு -மிடையில் வருவதால் சந்திரன் போன்று வளர்பிறை, தேய்பிறை வடிவங்களில் தெரிகின்றது.

R.சிவகுமார்
தரம்-08.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவு

01. சிரியா பாலைவனம் எங்கு உள்ளது?
அரேபியா.

02. உலகிலேயே செம்பு அதிகமாக கிடைக்கும் நாடு எது?
சிலி

03. பாக்கிஸ்தானின் தேசிய விளையாட்டு எது?
ஹொக்கி

04. உலகிலேயே மிகவும் ஆழமான ஆழி எது?
மரியானா ஆழி.

05. கணினியை கண்டுபிடித்தவர் யார்?
சார்ளஸ் பபேஜ்.

P.மகேஸ்வரன்
தரம்-06.

# என்னைப் பற்றி

எனது பெயர் B.சகுந்தலா. நான் கோணபிட்டிய பிரின்சஸ் தமிழ் வித்தியாலயத்தில் தரம் 7ல் கல்வி கற்கிறேன்.எனது தந்தையின் பெயர் திரு.V.பாலகிருஷ்ணன். தாயார் பெயர் திருமதி.S.ஜெயக்கொடி. தம்பியின் பெயர் B.ஜெயனேஸ்வரன், தங்கையின் பெயர் B.செல்வராணி. எனது பொழுதுபோக்கு கதைப்புத்தகம் வாசித்தல் ஆகும். எனக்கு பிடித்த பாடம் தமிழ். எனக்கு பிடித்த பறவை கிளி. எனது நண்பிகளின் பெயர்கள் K.ஆதிசலா,R.மணிமேகலா எனது இலட்சியம் எதிர்காலத்தில் சிறந்த ஒரு ஆசிரியராக வரவேண்டும் என்பதாகும்.

B.சகுந்தலா
தரம்-07

# நான் விரும்பும் ஆசிரியர்

நான் விரும்பும் ஆசிரியர் பெயர் திரு.ஞா.விக்டர். அவர் மிகவும் நல்லவர். அவர் அன்புடன் பாடங்களை கற்பிப்பார். அவர் கணிதம், சமூகக்கல்வி ஆகிய பாடங்களை மிகவும் விளக்கமாகக் கற்பிப்பார். தாய், தந்தை போல் அவரும் மிகவும் கருணை உள்ளவர். நாம் ஆசிரியர்களுக்கு கீழ்படிந்து நடக்க வேண்டும். அவர்கள் சொல்லித் தரும் பாடங்களைக் கவனமானக் கற்றல் வேண்டும்.

கே.ஆதிசலா
தரம்-07.

மனிதர்கள் தனிமையில் வாடக் காரணம் அவர்கள் பாலம் அமைப்பதற்கு பதிலாக தம்மைச் சுற்றி சுவர்களை அமைத்துக் கொள்வதாகும்.
J.F.நியூ ட்டன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழமொழிகள்

- ✱ அழுத பிள்ளை பால் குடிக்கும்.
- ✱ காற்றுள்ள போதே தூற்றிக் கொள்.
- ✱ குரைக்கிற நாய் கடிக்காது.
- ✱ விளையும் பயிர் முளையிலே தெரியும்.
- ✱ தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்.

பா.புஸ்பகாந்
தரம்-03

## சிந்தனைத் துளிகள்

01. அன்பு காட்டு ஆனால் அடிமையாகி விடாதே.
02. பணிவாய் இரு சில சமயத்தில் கோழையாகி விடாதே.
03. உழைப்பை நம்பு உன் தாயையும், கடவுளையும் மறந்து விடாதே.
04. நிஜத்தை நம்பு பொய்யை நம்பிவிடாதே.
05. சிக்கனமாய் இரு கஞ்சனாகி விடாதே.
06. உன்னை முதலில் நம்பு பிறகு மற்றவரை நம்பலாம்.
07. தன் உழைப்பில் வாழ் மற்றவர் உழைப்பில் வாழ்ந்து விடாதே.
08. போட்டியுடன் வாழ் பொறாமையுடன் வாழாதே.
09. பிறருடைய நிலையைப் பார் பணத்தை பார்க்காதே.
10. படிப்பை நம்பி இரு நடிப்பை நம்பி விடாதே.

M.அபிராமி சிவமலர்
தரம்-06

## விடுகதைகள்

01. முள்ளுக்குள்ளே முத்துக் குவியல் அது என்ன?
02. முத்தழகி உடம்பெல்லாம் பச்சை நிறம்.
03. மரங்களின் நடுவே வலை. வலையின் நடுவே மீனவன் அது என்ன?
04. ஓடுவான் ஓடுவான் ஓடிக்கொண்டே இருப்பான். அறுந்தாலும் ஒரே இடத்தில் இருப்பான் அவன் யார்?
05. அவன் அழுதால் உலகம் சிரிக்கும் அவன் யார்?
06. உயரப் பறப்பவனுக்கு கீழே கடிவாளம் அது என்ன?
07. அள்ள அள்ள குறையாது. ஆனால் குடிக்க முடியாது அது என்ன?

07.கடல்நீர்
06.பட்டம்
05.வானம்
04.கடிகாரம்
03.சிலந்தி
02.வெண்டிக்காய்
01.பழாப்பழம்

T.புண்ணியமூர்த்தி
தரம்-06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான் இரசித்த நாட்டார் பாடல்

இஸ்டோரும் கட்டியாச்சி
இஞ்சீனும் பூட்டியாச்சி
இளவட்டப் பொண்ணுங்களா
இல பொறுக்க வந்திடுங்க.

பேரிவல தோட்டத்திலே
மேக்கணக்கு கண்டாக்கையா
இஞ்சீனே தட்டி விட்டு
இல பொறுக்க நான் வாறேன்.

ஆடுதையா இஞ்சீனு
அரைக்குதையா செம்புரோதை
ஓடுதையா வாருகளும்
ஒளிஞ்சிருந்து பாருமையா

வெங்கல ரோதையிலே
வேலை செய்யும் என் சாமி
வெத்திலை வேணுமினா
வெளியே வந்து கேளுமையா.

D.உதயகுமார்
தரம்-08

## கிளி

கிளி பச்சை நிறம்
கிளியின் சொண்டு சிவப்பு நிறம்
கிளி பேசும்
கிளி பழங்களை உண்ணும்
கிளி அழகான பறவை

J.டிலினிகஸ்மியா
தரம்-01

## MY SISTER

My Sister name is Miss. Kanagaratnam Abisala. She is thirteen years old. She is studying at NH/Princess Tamil Vidyalayam. Her hobbies are collecting stamps and reading story books. Her favorite fruit is Mango. Her favorite color is red. I love my sister.

K.Dilani
Grade-06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெரிந்து கொள்ளுங்கள்

01.நின்று கொண்டு தூங்கும் விலங்கு எது?
குதிரை

02.ஒரு நாளைக்கு தன் எடை அளவுள்ள உணவை உண்ணும் பிராணி எது?
எலி

03.விலங்குகளில் அதிகநேரம் தூங்கும் விலங்கு எது?
கழுதை

04.பின்னோக்கி பறக்கும் பறவை எது?
அமினஸ் பறவை

05.நட்சத்திர மீன்களுக்கு எத்தனை கைகள் உள்ளன?
5-40 கைகள்

P.மனோஜ்
தரம்-04

## விடுகதைகள்

1.தீக்குளித்தாலும் திடமாக இருப்பான் அவன் யார்?

2.ஓ ஓ மரமே உயர்ந்த மரமே ஒரு பிடி இலைக்கு விதியற்ற மரமே அவன் யார்?

3.ஆயிரம் தச்சன்கள் கட்டிய அழகான மண்டபம் ஒரு கை பட்டு உடைந்த மண்டலம் அது என்ன?

4.ஓடு ஓடும் சங்கிலி உருண்டோடும் சங்கிலி பள்ளத்தைக் கண்டால் பாய்ந்தோடும் சங்கிலி அது என்ன?

5.அழகான அம்மா அழகான பிள்ளையைப் பெறுவாள் அவள் யார்?

1.செங்கல்
2.கல்லி மரம்
3.தேன் கூடு
4.தண்ணீர்
5.வாழைக்கன்று

R.அகிலாஸ்
தரம்-06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுகதைகள்

01. தங்கத் தாம்பூலம் தவறவிட்டால் போச்சு அது என்ன?
02. கிணற்றை சுற்றி அகத்திக் கீரை. அது என்ன?
03. ஒரு நெல் குத்தி வீடெல்லாம் உமி அது என்ன?
04. சுளகு நிறைய சோளப்பொறி விடிந்து பார்த்தால் ஒன்றும் இல்லை அது என்ன?
05. வீதிக்கு துணை வருவான் வீட்டுக்குள் வரமாட்டான் அவன்யார்?
06. சிவப்பு பைக்குள் சில்லறை காசுகள் அது என்ன?

01.முட்டை
02.கண்
03.விளக்கு
04.நட்சத்திரம்
05.செருப்பு
06.மிளகாய்

D.சதீஸ்குமார்
தரம்-06

## உலகின் சில பிரதான நதிகள்

| நதி | நிலையம் | நீளம் கி.மீ |
|---|---|---|
| 01.அமேசன் | தென் அமெரிக்கா | 6750 |
| 02.நைல் | ஆபிரிக்கா | 6690 |
| 03.மிசூரி மிசுசிப்பி | வடஅமெரிக்கா | 6020 |
| 04.யாங்கிசிக்கியாங் | சீனா | 5797 |
| 05.ஓப் | ரஷ்யா | 5567 |
| 06.குவாங்கோ | சீனா | 4667 |
| 07.ஜெனசி | ரஷ்யா | 4506 |
| 08.பரானா | தென்அமெரிக்கா | 4498 |
| 09.கொங்கோ | ஆபிரிக்கா | 4371 |
| 10.அமூர் | ஆசியா | 4352 |
| 11.லீனா | ரஷ்யா | 4268 |
| 12.மக்கன்சி | ஆசியா | 4241 |
| 13.நைகர் | ஆபிரிக்கா | 4184 |
| 14.மீக்கொங் | ஆசியா | 4023 |
| 15.வொல்கா | ஐரோப்பா. | 3687 |

B.மன்சூர்காந், தரம்-07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சில நாடுகளும் நாணயங்களும்

1.இந்தியா - ரூபா
2.பங்களாதேஷ் - ராகா
3.மலேசியா - றிங்கிற்
4.யப்பான் - யென்
5.அமெரிக்கா - டொலர்
6.கனடா - கனேடிய டொலர்
7.தென்கொரியா - வொன்
8.தென்ஆபிரிக்கா - றாண்ட்
9.கென்யா - சிலிங்
10.மேற்கு ஜெர்மனி - மார்க்
11.இந்தோனேசியா - ருப்பியா
12.எகிப்து - எகிப்திய பவுண்
13.பர்மா - கயாற்
14.பிரான்ஸ் - பிராங்
15.இஸ்ரேல் - செக்கெல்ஸ்
16.ஈரான் - றியால்
17.பின்லாந்து - மார்க்கா
18.இத்தாலி - லிறா
19.ஈராக் - தினார்
20.அவுஸ்திரேலியா- அவுஸ்திரேலிய டொலர்

M.சந்திர சிவா- தரம்-08

## உங்களுக்குத் தெரியுமா?

1. ஒரு நாகப்பாம்பின் விசத்தை விட 50 மடங்கு விஷமுடையது கடற்பாம்பின் விஷம்.
2. பறவைகளின் முட்டைகளில் மிகவும் பெரியது தீக்கோழியின் முட்டையாகும். இது கோழி முட்டையை விட 20 மடங்கு பெரியது.
3. முதலையின் வியர்வை அதன் கண்கள் வழியாகவே வெளியேறுகிறது.
4. கழுகு சுமார் 20 ஆண்டுகள் வரை உயிர் வாழக்கூடிய பறவையாகும்.
5. அநாதைகளுக்கு ஓய்வூதியம் அளிக்கும் நாடு சுவீடன்.
6. வெள்ளை இரத்தம் கொண்ட ஒரே ஒரு உயிரினம் வெட்டுக்கிளி
7. கடல் நீரைப் பருகும் ஒரே உயிரினம் பெண்குயின் ஆகும்.
8. உலகிலேயே தேங்காய் அதிகம் விளையும் நாடு பிலிப்பைன்ஸ் ஆகும்.

வி.வசந்தகுமாரி - தரம்-06

## நான் விரும்பும் பெரியார்

நான் விரும்பும் பெரியார் மகாகவி பாரதியார் ஆவார். பாரதியார் எட்டய புரத்தில் 1882 ம் ஆண்டு பிறந்தார்.தாயார் பெயர் இலட்சுமி அம்மாள். தந்தையின் பெயர் சின்னச்சாமி ஐயர். பெண் உரிமைக்காக பாரதியார் பல பாடல்களைப் பாடியுள்ளார். பாரதியாருக்கு புதுமைக்கவிஞன் எனும் சிறப்பு பெயரும் உண்டு. பாரதியார் பாடல்களை மட்டுமல்ல.கட்டுரை களையும் எழுதியுள்ளார். இவரது பாடல்கள் வீரத்தை உணர்த்துவனவாக உள்ளன. இந்திய நாட்டின் விடுதலைக்காக இவர் பல பாடல்களை பாடியுள்ளார்.பாரதியார் 1921 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 11ம் திகதி இவ்வுலகை விட்டு மறைந்தார்.

S.பிரபுதேவா - தரம்-05.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படித்துச் சுவைத்தவை

1. சிப்பியில் முத்து விளைய எடுக்கும் காலம் எவ்வளவு?
   15 ஆண்டுகள்
2. அயர்லாந்தின் தேசிய சின்னம் எது?
   ஹப்ரக் மலர்
3. புவிக்கும் சந்திரனுக்கும் இடையிலான தூரம் எவ்வளவு?
   386 இலட்சம் கி.மீ
4. உலகிலேயே பெண்களுக்கு கட்டாய இராணுவ பயிற்சி அளிக்கும் நாடு எது?
   இஸ்ரேல்
5. ஆசியாவின் கிறிஸ்தவ நாடாகக் கருதப்படும் நாடு எது?
   பிலிப்பைன்ஸ்

பா.தினேஸ்குமார்
தரம்-04

## தேடித் தெரிந்தவை

01. நேரடி ஜனநாயகம் முதலில் பிறந்த நாடு எது? கிரேக்கம்
02. மறைமுக ஜனநாயகம் முதலில் பிறந்த நாடு எது? பிரித்தானியா.
03. 1910 ஆம் ஆண்டு இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட யாப்பு எது?
    மக்கள் யாப்பு
04. சார்க் அமைப்பு எத்தனையாம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது?
    1985
05. சார்க் அமைப்பில் தற்போது அங்கம் வகிக்கும் நாடுகள் எத்தனை?
    08
06. ஐக்கிய நாடுகள் சபை எத்தனையாம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது?
    1951
07. யுனேஸ்கோ அமைப்பு எத்தனையாம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது?
    1946
08. யுனிசெப் அமைப்பு எத்தனையாம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது?
    1946
09. ஐக்கிய நாடுகள் செயலகம் எங்கு அமைந்துள்ளது?
    அமெரிக்காவின் நியூயோர்க் நகரில்
10 சீனாவின் பிரதான மொழி யாது?
    சீனம்

பா.வினோதன் -
தரம்-08.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிந்து கொள்ளுங்கள்

01.பூமியின் மொத்த பரப்பளவு யாது?
51,00,56,570 சதுர கி.மீ
02.பூமியின் விட்டம் யாது?
12756.3 கி.மீ
03.பூமியின் வயது எத்தனை?
ஏறத்தாழ 4540 மில்லியன் வருடங்கள்
04.புவியொழுக்கு என்றால் என்ன?
பூமி சூரியனைச் சுற்றி வருகின்ற நீள்வட்டப்பாதையே புவியொழுக்கு ஆகும்.
05.புவியில் இரவும் பகலும் எங்கு சமமாக இருக்கின்றன?
மத்தியக் கோட்டுப் பிரதேசத்தில்

R.பிரசாந்தன்
தரம்-08



விளையாட்டு போட்டியின் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வகுப்புத் தலைவர்கள்



இந்து இலக்கிய மன்ற உறுப்பினர்களுடன்
அதிபர் மற்றும் ஆசிரியர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆசிரியர்களுடன் வகுப்புத் தலைவர்கள்



கலைநிகழ்ச்சியின் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயர்ந்த மலைச் சிகரங்கள்

| சிகரம் | மலை/நாடு | உயரம் (மீற்றர்) |
|---|---|---|
| 01. பீதுருதாலகாலை | இலங்கை | 2521m |
| 02. கிளிமஞ்சாரோ | தன்சானியா | 5895 m |
| 03. மவுன்றலோகன் | யுக்கொன் | 6050 m |
| 04. மக்கின்லே | அலாஸ்கா | 6194 m |
| 05. போனெற் | அந்தீஸ் | 6872 m |
| 06. அகொன்காகுகா | அந்தீஸ் | 6960 m |
| 07. நம்காபர்வா | சீனா | 7756 m |
| 08. நந்ததேவி | இமயமலை | 7817 m |
| 09. அன்னபூரனா | இமயமலை | 8078 m |
| 10. நங்கபர்வதம் | இமயமலை | 8126 m |
| 11. தவனகிளி | இமயமலை | 8172 m |
| 12. மாகுலூ | இமயமலை | 8470 m |
| 13. கஞ்சன்யங்கா | இமயமலை | 8579 m |
| 14. கே-2 | கார்க்கோபுரம் | 8750 m |
| 15. எவரஸ்ட் | இமயமலை | 8848 m |

பா.சரூண்காந் - தரம்- 08

## பொது அறிவு

01. எந்த வகை கரடி நீர் அருந்துவதில்லை? கோலா கரடி
02. எந்த விலங்குக்கு நிறம் தெரிவதில்லை? நாய்
03. இமை இல்லாத விலங்குகள் எவை? மீன், பாம்பு.
04. எந்த விலங்குக்கு சுவையை உணர முடியாது? முதலை
05. நீர் வெறுப்பு நோய் எந்தெந்த விலங்குகளால் ஏற்படும்? பூனை, நாய்
06. தூரத்தில் இருந்தே நஞ்சை உமிழ்ந்து இரையை செயலிழக்கச் செய்யும் ஒருவகை பாம்பின் பெயர் யாது? ஸ்மீட்டின் கோப்ரா
07. ஒரு நாளைக்கு 8000 முட்டைகளை இடும் விலங்கு எது? கரையான்
08. பத்து வகை குரல்களில் கீச்சிடும் ஒரு விதப் பறவையின் பெயர் என்ன? ப்பிறஸ்
09. பிளேக் நோய் எந்த விலங்கால் ஏற்படும்? எலி
10. அவுஸ்திரேலியாவின் தேசிய மிருகம் எது? கங்காரு

R.பிரசாந்தன் - தரம்-08

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சில தீவுகளும் அவை அமைந்துள்ள நிலையங்களும்

| தீவின் பெயர் | | நிலையம் (சமுத்திரம்) |
|---|---|---|
| 01. கிறீன்லாந்து | - | ஆட்டிக் |
| 02. நியூகினி | - | பசுபிக் |
| 03. போர்னியோ | - | பசுபிக் |
| 04. மடகஸ்கார் | - | இந்து |
| 05. பபின்தீவு | - | ஆட்டிக் |
| 06. சுமத்திரா | - | பசுபிக் |
| 07. கொன்சூ | - | பசுபிக் |
| 08. பெரிய பிரித்தானியா | - | அத்திலாந்திக் |
| 09. செலிபஸ் | - | பசுபிக் |
| 10. பிறின்ஸ் அல்பேட் | - | ஆட்டிக் |
| 11. தென்தீவு | - | பசுபிக் |
| 12. யாவா | - | பசுபிக் |
| 13. வடதீவு | - | பசுபிக் |
| 14. கியூபா | - | அத்திலாந்திக் |
| 15. நியூபவுண்லாந்து | - | அத்திலாந்திக் |
| 16. லூசொன் | - | பசுபிக் |
| 17. ஐஸ்லாந்து | - | ஆட்டிக் |
| 18. நிண்டானோ | - | பசுபிக் |
| 19. கொக்கைடோ | - | பசுபிக் |
| 20. இலங்கை | - | இந்து |

S.கனகா
தரம் - 08

## எனது பாடசாலை

எனது பாடசாலையின் பெயர் பிரின்சஸ் தமிழ் வித்தியாலயம் ஆகும். எனது பாடசாலை அதிபரின் பெயர் திரு.K.ராசலிங்கம் ஆகும். இப்பாடசாலையில் தரம் 1-9 வரையிலான வகுப்புகள் காணப்படுகிறது. 215 மாணவ மாணவிகள் கல்வி கற்கின்றனர். எனது பாடசாலையில் 8 ஆசிரியர்கள் கடமையாற்றுகின் -றனர். எனது வகுப்பாசிரியரின் பெயர் திரு.K.கேதீஸ்வரன் ஆகும். எனது பாடசாலையில் இரண்டு கட்டிடங்கள் காணப்படுகின்றன. எனது பாடசாலை அழகான பாடசாலையாகும்.

S.ரதீஸ்
தரம்-03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழமொழிகள்

01. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
02. உப்பிட்டவரை உள்ளளவும் நினை
03. எட்டாம் கனிக்கு கொட்டாவி விடாதே.
04. ஓட்டைச் சட்டியானாலும் கொல்கட்டை வெந்தால் சரி
05. மின்னுவதெல்லாம் பொன் அல்ல
06. இறக்கப் போனாலும் சிறக்கப் போ.
07. ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு.
08. போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து.
09. ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது.
10. கொல்லன் தெருவில் ஊசி விற்காதே.

R.கோகிலாதேவி, தரம்-06

## 16ம் நூற்றாண்டின் கண்டுபிடிப்புகள் சில.........

19ம் நூற்றாண்டை விஞ்ஞான நூற்றாண்டு எனக் கூறலாம். அதில் தான் மனிதனின் நாகரிக முன்னேற்றத்திற்கு இன்றியமையாத பல சாதனங்கள் கண்டு பிடிக்கப்பட்டன.இங்கு கொடுக்கப்பட்டிருக்கும் பொருட்கள் 19ம் நூற்றா-ண்டில் கண்டு பிடிக்கப்பட்டமையாகும். இந் நூற்றாண்டிலேயே விஞ்ஞான சாதனங்கள் அதிகமாகக் கண்டுபிடிக்கப்பட்டன.

01. 1802 - நீராவிப்படகு
02. 1802 - நீராவி ரயில் எஞ்சின்
03. 1820 - எலாஸ்டிக்
04. 1823 - அம்மைக்குத்துதல்
05. 1825 - ரயில்வே
06. 1827 - புரையோட்டத் தடை மருந்து
07. 1827 - தீக்குச்சி
08. 1828 - மின்சார பல்ப்
09. 1831 - மின்சார டைனமோ
10. 1837 - தந்தி
11. 1839 - சைக்கில்
12. 1840 - மின்சார கடிகாரம்
13. 1840 - தபால்தலை
14. 1872 - ஃபிளாஸ்டிக்
15. 1887 - சினிமா
16. 1887 - கண்ணாடிப் பொருட்கள்

மேற்படி பொருட்கள் அனைத்தும் கண்டுபிடிக்கப்பட்டது. பிரிட்டன் நாட்டாரால் ஆகும்.

ம.ஹுதிஸ்டன் - தரம் - 08.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழமொழிகள்

அறையில் ஆடியன்றோ அம்பலத்தில் ஆடவேண்டும்.
அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராது.
அன்னமிட்டவர் வீட்டில் கன்னம் இடலாமா?
அறிவுடையாரை அரசனும் விரும்புவார்.
அற்பனுக்கு வாழ்வு வந்தால் அர்த்த ராத்திரியில் குடைபிடிப்பான்.
அஞ்சினவன் கண்ணுக்கு ஆகாயமெல்லாம் பேய்.
ஆக்கப் பொறுத்தவன் ஆறப்பொறுக்க வேண்டும்.
ஆசை வெட்கம் அறியாது.
ஆடு நனைகிறதென்று ஓநாய் அழுகிறதாம்.
ஆத்திரக்காரனுக்கு புத்தி மத்திமம்.

R.உமாபிரியணி - தரம்-06

## படித்துச் சுவைத்தவை

01. யானையின் இதயம் ஒரு நிமிடத்திற்கு 65 முறை துடிக்கின்றது
02. யானையின் உடலில் 75 சதவீதம் நீர் உள்ளது.
03. பூமியிலிருந்து ஒரு நிமிடத்தில் 3600 தொன் எண்ணெயும் 4000 தொன் நிலக்கரியும் எடுக்கப்படுகின்றது.
04. உருளைக்கிழங்கில் 80 சதவீதம் நீர் உள்ளது.
05. மஞ்சள் ஆறு என அழைக்கப்படும் ஆறு குவாங்கோ
06. சீனாவின் துயரம் என அழைக்கப்படும் நதி நைல் நதி.
07. 24 மணித்தியாலங்களில் நமது இதயம் 103,689 தடவை துடிக்கின்றது.
08. நாம் 24 மணி நேரத்தில் 7,00,9,000 மூளை அணுக்களுக்கு வேலை தருகின்றோம்.
09. நாம் 24 மணிநேரத்தில் 2.90 இறாத்தல் நீர்ப்பொருளை அருந்துகின்றோம்.
10. நமது இரத்தம் 26,88,000 கி.மீ தூரம் செல்கின்றது.

சு.பத்மபிரியா - தரம்-08.

## பொது அறிவு

01. உலகின் மிகப் பெரும் தீவு எது? கிறின்லாந்து
02. உலகத்தின் கூரை என்பது எது? திபெத் மேட்டுநிலம்
03. அறுவைச் சிகிச்சை முறையை அறிமுகம் செய்தவர் யார்? யோகம் விஸ்டர்
04. இலங்கையில் அதிக குளிருடைய இடம் எது? கந்தப்பளை.
05. இலங்கையில் நிலப்பரப்பில் பெரிய மாகாணம் எது? வடமத்திய மாகாணம்.
06. உலகில் மிக அதிகமாக விற்பனையாகும் பொருள் எது? பெற்றோல்

S.வாசுதேவி - தரம்-05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது அறிவு

01. சனத்தொகை குறைந்த நாடு
வத்திக்கான்
02. அதி கூடிய தீவுகளைக் கொண்ட நாடு
பிலிப்பைன்ஸ்
03. அதிகளவில் சீனியை உற்பத்தி செய்யும் நாடு
கியூபா
04. அதிகளவில் தகரத்தை உற்பத்தி செய்யும் நாடு
ஆர்ஜென்டீனா
05. கூடியளவிலான பத்திரிகைகளை வெளியிடும் நாடு
இந்தியா
06. ஒரே ஒரு இந்து மத நாடு
நேபாளம்
07. ஆறுகளே இல்லாத நாடு
சவுதி அரேபியா
08. அதி குளிர்ச்சியான இடம்
அந்தாட்டிக்கா

S.ராஜகுவரன் - தரம் - 08

## பழமொழிகளும் அவை கூறும் கருத்துகளும்

01. அச்சாணியில்லாத் தேர் முச்சாணும் ஓடாது. (முக்கியத்துவம்)
02. ஆடமாட்டாதவள் அரங்கு பிழை என்றாளாம். (சந்தர்ப்பத்திற்கு நழுவுதல்)
03. இக்கரை மாட்டிற்கு அக்கரை பச்சை. (திருப்தியற்ற மனம்)
04. அடிநாக்கில் நஞ்சும் நுனி நாக்கில் அமிர்தமும். (வஞ்சகம்)
05. ஆழம் அறியாது காலை விடாதே. (ஆராய்ந்து செய்)
06. இட்டுக்கெட்டார் எவரும் இல்லை. (தருமம் செய்து கெட்டவர்கள் இல்லை)
07. அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும். (விடாமுயற்சி)
08. அலையில்லா ஊருக்கு இலுப்பைப் பூ சர்க்கரை. (அற்பனுக்கு மதிப்பு)
09. இளங்கன்று பயமறியாது. (வாலிபத்துணிவு)
10. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு. (ஒற்றுமையே பலம்)
11. ஆனைக்கும் அடி சறுக்கும். (பெரியோரும் தவறு விடலாம்)
12. இளமையிற் கல்வி சிலையில் எழுத்து. (இளமையிற் கற்றலின் பயன்)
13. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு. (அளவை மீறுதல்)
14. ஆனைக்கொரு காலம் பூனைக்கொரு காலம். (காலம் மாறி வரும்)
15. அன்பான சினேகிதனை ஆபத்தில் அறியலாம். (உத்தம நட்பு)

R.ரமணிதரன் - தரம்-08

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரின்சஸ் தமிழ் வித்தியாலயம் மென்மேலும்
சிறந்தோங்க வாழ்த்துக்கள்

K.Atpudarajah



**ISLAND TRADERS**

No-64, Holbrook Bazaar,
Agarapathana
Tel:- 051-2230106, Fax:- 051-2230134

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Printed By Megaa Graphic - Ragala Tel.060-2535321

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org